# கலைக்கமலம்



# கலைவிழா 95

**S.Thomas' College Bandarawela**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவீன டிசைன்களில்
நகைகளை செய்வதற்கு நாடவேண்டிய
இடம்

# VINOTHA GOLD WORK SHOP

110/3, SRI KATHIRESAN STREET,
COLOMBO- 13
T.P. 330622



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

P. Brendro



# புனித தோமையர் கல்லூரியின் தமிழ் இலக்கிய கலாமன்றம்

வழங்கும்

# கலைவிழா

காலம் 22-07-1995 சனிக்கிழமை

காலை 9.00 மணி

இடம் நகர மண்டபம்

பண்டாரவளை

பிரதம அதிதி

**மாண்புமிகு தெ.ஈஸ்வரன் அவர்கள்**

மாண்பமை மொறீசியஸ் தூதர்

## Tamil Literary Association
## S'Thomas' College, Bandarawela

Proudly Presents

# *Kalai Vizha*

on Saturday 22-07-1995 at 9.00 am

Chief Guest

**Hon.D.Eassuwaran**

Honorary consul for Republic of Mauritius

Venue Town Hall

Bandarawela



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி
வாழிய வாழியவே

வானமளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே.

ஏழ்கடல் வைப்பினும் தன் மணம் வீசி
இசை கொண்டு வாழியவே.

எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே.

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே.

தொல்லை வினைதரு தொல்லையகன்று
சுடர்க தமிழ்நாடே.

வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே.

வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழியவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Message from the Headmaster

*The Annual Kalai Vizha programme has become a much looked forward to, event in the School Calendar. The final day programme brings to a culmination the Literary activities conducted throughout the week. This programme has helped the children of our School to display their talents while it has also afforded an opportunity to the children of other schools in the area to meet each other in a relaxed atmosphere. The students and teachers of the Tamil Literary Union have worked very hard to make this event a success. While congratulating them let me extend to them my sincere good wishes.*

S.Thoma's College

Bandarawela.

**R.R.R.Herethge**

Head Master



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதம அதிதியின் ஆசிச் செய்தி



ஒரு மனிதனது வாழ்க்கையில் பொற்காலமாக கருதப்படுவது அவனது பள்ளிக்காலம் அது மாத்திரமல்ல எதிர்காலத்தில் அவன் சாதிக்கப்போவதற்கு அத்திவாரமாக அமைவதும் இந்த காலம்தான் இந்த கால கட்டத்தில் ஒரு மாணவனுக்கு கிடைக்கின்ற வாய்ப்புக்கள், அனுபவங்கள், பயிற்சிகள் பொன்னானவை இவைகளே அவனது எதிர்கால வாழ்விற்கு படிக்கற்களாக அமைகின்றன

கலை விழாவாயினும் சரி, விளையாட்டுப் போட்டியானாலும் சரி, இவைகள் மாணவர்கள் தங்களுக்குள்ளே ஒளித்திருக்கும் திறன்களை வெளிக்கொணரும் ஆற்றல் படைத்தவை. எந்தக் கல்லூரிகளில்இம்மாதிரியான விழாக்கள் அதிகமாக கொண்டாடப் படுகின்றனவோ, அந்தக் கல்லூரி மாணவர்கள் எதிர்காலத்தில் ஒளிவிட்டுப் பிரகாசிப்பதை நாம் கண்கூடாகப் பார்க்கின்றோம்.

இவ்விழாக்களின் போது நல்ல எண்ணங்கள் மனதில் பதியுமானால் பிற்கால வெற்றிகளுக்கு அவை விதையாக அமையும்.

வெற்றி என்பது தங்கக் கரண்டிகளை வாயில் வைத்துக் கொண்டு பிறக்கும் குழந்தைகளுக்கு மட்டும் உரித்தான சொத்து அல்ல, யாரெல்லாம் நல்ல எண்ணங்களை மனதில் பதிய வைத்து அதற்கு நீர் ஊற்றி உரமிட்டு வளர்க்கிறார்களோ, அவர்கள் எந்த சூழ் நிலையில் பிறந்திருந்தாலும் சரி, வெற்றி அவர்கள் சொத்தாகின்றது.

மாணவர்களை சிறந்த வாரிசுகளாக உருவாக்கும் ஆற்றல் படைத்த இவ்விழாக்களை சிரமம் பாராது நடந்துகின்ற ஆசிரிய பெருமக்களுக்கு எனது மனமுவர்ந்த பாராட்டுக்கள்.

**தெ.ஈஸ்வரன்**
மாண்பமை மொரிஷியஸ் தூதுவர்


11.07.1995



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுப்பாசிரியரின் ஆசிச்செய்தி



50வருடங்களுக்கு மேலான சரித்திரத்தைக் கொண்ட எமது கல்லூரி தமிழுக்கு ஆற்றியுள்ள சேவை அளப்பரியது. கல்லூரியில் பயின்ற ஆயிரக்கணக்கானோர் உயர்பதவிகளை வகித்து நாட்டிற்கு சேவையாற்றுகின்றனர். 82ம் ஆண்டின் பின் நடாத்தப்படாமல் இருந்த கலைவிழாவை 1990ஆம் ஆண்டு தொடங்கி வருடாந்தம் நடத்திக்கொண்டு வரமுடிந்ததையிட்டு ஆண்டவனுக்கு நன்றி செலுத்துவோம்.

எந்த ஒரு இனத்திலும் தனித்துவத்தை பிரதிபலிக்கும் அம்சங்களில் முக்கிய இடம் பெறுபவை மொழியும் கலாச்சாரமுமாகும். இதை உணர்ந்தே பண்டைத் தமிழ் மன்னர்கள் தமிழையும் கலாச்சாரத்தையும் வளர்த்தனர். அதன் மூலம் தமிழ் மொழியில் சிறந்த இலக்கியங்கள் வெளிவந்தன. தமிழ் மொழி காலத்தில் மிக்க தொன்மை வாய்ந்த மூத்த மொழி. ஏனைய பண்டைய மொழிகளைப்போன்று அழியாது, இன்னும் இளமை எழிலுடன் விளங்கும் மொழி. இதனை எமது இளஞ் சிறார்களுக்கு ஊட்டுவதற்காக எமது கலாமன்றம் மேற்கொள்ளும் சேவை அளப்பரியது. இவ்வருடம் ஊவா, மத்திய மாகாணங்களின் பாடசாலை மாணவர்கள் நாடகப் போட்டியில் பங்குபற்றுவது சிறப்பானது.

மாணவர்கள் ஆளுமை, தன்னம்பிக்கை, தலைமைதாங்கும் பண்பு, திறமை வெளிக் கொணரும் ஆற்றல், சிந்தித்து செயலாற்றும் திறன், சகிப்புத்தன்மை, ஏனையோரை மதித்தல் முதலிய கோட்பாடுகளை வளர்த்துப் பூரணத்துவம் பெற்றவர்களாக மிளிர வேண்டும் என்பதே எம் அவா.

இக்கலைவிழா இனிதே நடைபெற ஊக்கத்தை அளித்த தலைமை ஆசிரியருக்கும் ஏற்பட்டாளர் திரு Gதங்கராஜாவுக்கும் நிதிப் பொறுப்புக்களை மேற்கொண்ட திரு Mசந்திரகுமாருக்கும், பல வழிகளிலும் உதவிபுரிந்த சக ஆசிரிய ஆசிரியைகளுக்கும், இலக்கியகலாமன்ற நிருவாக குழுவுக்கும். விளம்பரங்களை தந்துதவிய அன்பர்களுக்கும் இம்மலரை சிறப்பாக அச்சிட்டுத்தந்த நண்பன் திரு Sஒலகேசனுக்கும் எனது இதயபூர்வமான நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.

**M.தேன்நிலவு**

தமிழ் இலக்கிய கலாமன்ற பொறுப்பாசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவரின் உள்ளத்திலிருந்து



ஊவாவின் உயர்நகரங்களில் ஒன்றாக விளங்கும் பண்டாரவளை மாநகரில் தனது 50 ஆவது வயதை மூன்று வருடங்களுக்கு முன் பேபூர்த்தி செய்த புனித தோமையர்கல்லூரியின் பைந்தமிழ் செல்வங்களின் கல்வியை வளர்த்து தமிழ் பரவும் வகை செய்ய அமையப்பெற்றது தமிழ் இலக்கிய கலாமன்றம். அம்மன்றத்தினால் வழமைபோல இவ்வாண்டு கலை விழைவை நடத்தி தமிழ்ச் சுவையுடன் கூடிய இம் மலரையும் சமர்ப்பிப்பதில் பெரு மகிழ்ச்சியடைகின்றோம்.

தேமதுரத் தமிழோசை உலகெங்கும் பரவும் வகை செய்ய பல வழிகள் உண்டு. அவையனைத்திலும் ஒரு சில வழிகளாவன

**எம்மை ஏய உணர்விக்கும் ஆயகலைகள் அறுபத்தி நான்கில்**

மாணவர்களின் அகத்தே மறைந்துகாணப்படும் ஒவ்வொரு ஆற்றல்களையும் உலகம் விளங்கச் செய்யும் வகையில் நாவண்மை, நாடகம், வில்லிசை, விவாதம், கட்டுரை, தனிப்பாடல் போன்ற போட்டிகளை நடத்தி கலைவிழாவை திருவிழாவாக நடத்துவதில் பேரின்பமடைகின்றோம்.

இக்கலைவிழா சிறப்பாக நடைபெற பேருதவி நல்கிய எமது கல்லூரி தலைமையாசிரியரும் மன்ற காப்பாளருமான திரு.ஆர்.ஆர்.ஆர்.ஹேறத்கே அவர்கட்கும், மன்றப் பொறுப்பாளரான திரு எம்.தேன்நிலவு அவர்கட்கும். பிரதம ஏற்பாட்டாளரான திரு ஜி.தங்கராஜா அவர்கட்கும் நிதிப்பொறுப்புக்களை மேற்கொண்ட ஆசிரிய திரு M.சந்திரகுமார் அவர்கட்கும், சகல வழிகளிலும் உதவி நல்கிய ஆசிரிய ஆசிரியைகட்கும். மாணவசகோதரர்கட்கும், விளம்பரதாரர்கட்கும். நலன் விரும்பிகட்கும் மனம் நிறைந்த நன்றிகளை செலுத்துகின்றேன்.

"சேம முறவேண்டுமெனில் தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செய்வீர்" என்ற பாரதியின் வேண்டுகோளுக்கு செவிசாயத்து செயலாற்றுவோமாக

செல்வன் சுரேந்திரன் தேவராஜ்
தலைவர்
தமிழ் இலக்கிய கலாமன்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் இலக்கிய கலா மன்றம்
## செயலாளரின் வருடாந்த ஆண்டறிக்கை – 1995



காப்பாளர் **திரு R.R.R ஹேரத்கே அவர்கள்**
போஷகர் **திரு எம்.தேன்நிலவு அவர்கள்**
மன்ற ஆண்டான ஜனவரி 11 இலிருந்து செயற்குழு

| | | |
|---|---|---|
| தலைவர் | செல்வன் | தே சுரேந்திரன் |
| செயலாளர் | ' | ப . கோபிநாத் |
| உபதலைவர் | ' | மு.இ.அரபாத் |
| உபசெயலாளர் | ' | மு.சப்ராஷ் |
| பொருளாளர் | ' | சு.சசிக்குமார் |
| பத்திராதிபர் | ' | பா.ரவி |
| உபபொருளாளர் | ' | மோ.திருக்குமரா |
| உப பத்திராதிபர் | ' | செ.செல்வகாந்தன் |

| | | | |
|---|---|---|---|
| வகுப்பு பிரதிநிதிகள் | ஆண்டு | 6 | : பூ பிரசாத் |
| | ' | 7 | : கே. சத்தியசீலன் |
| | ' | 8 | : சு. இந்திரநாத் |
| | ' | 9 | : ர. ரவிந்திரகுமார் |
| | ' | 10 | : வா. நாகதர்ஷன் |
| | ' | 11 | : ஆ. ரூபன் பிரசாத் |

1979 இல் தத்தி நடந்து 94 இல் "நித்திலம்" எனும் பெயருடன் பிறந்து உங்கள் கைகளில் திகழ்ந்தாள். எங்கள் அன்னை எழில் குன்றா இன்பத் தேன் தமிழ் பரப்பும் இவ்வாண்டில் **கலைக்கமலம்** எனும் பெயருடன் தூய தோமையர் கல்லூரி மாணவர்களாகிய நாங்கள் பிரசவித்து கலை மணம் பரப்புகின்றோம்

மன்றம் இவ்வாண்டில் ஜனவரி மாதம் தனது முதல் கூட்டத்தினையும் நான்கு செயற்குழு கூட்டங்களையும் கூட்டி சிறந்த முறையில் நடாத்தியது. இவ்வாறு நடைபெற்ற கூட்டத்தில் எமது மாணவர்கள் நாடகம், பேச்சு, விவாதம், பாடல் போன்ற பல்கலைத்துறையிலும் தங்களது திறமைகளை வெளிக்காட்டினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் ஒவ்வொரு கூட்டத்திலும் நடைபெற்ற நிகழ்ச்சிகள் மூலம் மாணவர்களின் இலக்கிய தமிழ் வளம் மற்றும் பொது அறிவு போன்றன வளர்ந்தன மேடைக் கூச்சங்கள் ஒழிந்தன.

மன்றம் இயங்குவதற்கு முழு உதவிகளை வழங்கிய எமது கல்லூரியின் தலைமை ஆசிரியர் திரு ஆர்.ஆர்.ஆர் ஹேரத்கே அவர்களுக்கும் பொறுப்பாசிரியர் திரு எம்.தேன்நிலவு அவர்கட்கும் மற்றும் தமிழ் வளர்த்த எங்கள் நிலத்திற்கு தமிழ் பயிர் வளர உதவிய ஆசிரிய ஆசிரியைகளும், மாணவர்களும் வழங்கிய ஒத்துழைப்பை வழங்கினார்கள். இதற்கு செயற்குழு சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

கலைவிழாவினை ஏற்பாடு செய்வதிலே முன்னணியில் நின்று உழைக்கும் எமது பொறுப்பாசிரியர் திரு எம்.தேன்நிலவு அவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகள்! எல்லா வழிகளிலும் எமக்கு ஒத்துழைப்பும் அறிவுரையும் வழங்கிய ஏற்பாட்டாளர் திரு கேதங்கராஜா அவர்களுகட்கும் மனமார்ந்த நன்றிகள். நிதி சம்பந்தமான ஆலோசனைகளை தந்துதவிய திரு எம்சந்திரகுமார் அவர்களுக்கும் மனமார்ந்த நன்றிகள். மற்றும் இவ்விழாவினை சிறப்பாக நடாத்த உதவிய ஏனைய ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் எங்கள் செயற்குழு சார்பில் என் நன்றிகள்.

மேலும் தமிழ் மன்றம் வெற்றிகரமாக செயற்படவும் அதன் பணிகள் மேலோங்கவும் உங்கள் ஒத்தாசையையும் இடைவிடாத முயற்சிகளையும் பணிவுடன் உங்களிடமிருந்து எதிர்பார்க்கின்றோம்


**எட்டுத்திசையெங்கும் தமிழ் பரப்ப....**
**கடல் தாண்டி தமிழ் மணம் பரவ....**
**எங்கள் ஒத்துழைப்புகள் என்றும்....**

"வாழ்க தமிழ் மொழி
வளர்க இலக்கியப் பணி"

**ப.கோபிநாத்**
செயலாளர் தமிழ் இலக்கிய கலா மன்றம்
புனித தோமையர் கல்லூரி
பண்டாரவளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பொருளாளரின் எண்ணத்திலிருந்து...

பொன்னும் பொருளும் இருந்தால் பூமி செழிப்படையும். அதுபோல் கலைவிழா எனும் சிறந்த கட்டிடத்தை கட்டியெழுப்ப பணம் எனும் மூலதனம் கொடுத்து அத்திவாரம் இட்ட அனைவருக்கும் நன்றி.

அன்பான ஆசிரியர்களுக்கும், என்சக மாணவர்களுககும், பல கஷ்டங்களுக்கும் மத்தியில் எம் நலன்கருதி எமக்கு பணத்தை தந்துதவிய பெற்றோருக்கும், மற்றும் பல வழிகளிலும் உதவி புரிந்தவர்களுக்கும், வெளி இடங்களிலிருந்து விளம்பரம் மூலம் உதவி செய்த அன்பர்களுக்கும் என் நன்றிகள்.

இந்த வருடம் பணம் கிடைப்பதில் சில வகுப்புக்களில் தாமதம் ஏற்பட்டது. அடுத்த வருடம் இதுபோன்ற குறைகள் இல்லாமல் சிறப்பாக அமைப்பதற்கு ஊக்கமளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். உபபொருளாளர் என்னுடன் பல விதங்களிலும் பணம் சம்பந்தமான உதவிபுரிந்த செல்வன் திருக்குமாராவுக்கும் என் மனமார்ந்த நன்றிகள்.

நன்றி

செல்வன் **S.சசிகுமார்**
பொருளாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைவிழா இனிதே நடந்தேற எமது வாழ்த்துக்கள்

☆
❀
☆
❀
☆
❀
☆
❀

# ஜலங்கா டெக்ஸ்டைல்ஸ்

87,99, பிரதான வீதி
பண்டாரவளை,

தொலைபேசி இல. 057-2786, 2809



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உசிவமயம்

## ஏற்பாட்டாளரின் எண்ணங்களிலிருந்து



எமது கல்லூரியின் தமிழ் இலக்கியக் கலாமன்றத்தினால் வருடா வருடம் நடாத்தப்படும் கலைவிழாவின் இவ்வருட கலைவிழா பற்றி உங்களுடன் சிலவற்றை பகிர்ந்து கொள்வதுபற்றி மகிழ்ச்சி அடைகின்றேன்.

எமது மாகாணத்தைப் பொறுத்தளவில் பாடசாலைகள் தற்சமயம் இலக்கியத்துறையில் வளர்ந்துவரும் கட்டத்தில் உள்ளது இவ்வாறான சந்தர்ப்பத்தில் எமது பாடசாலையின் மூலம் இத்துறைக்கு எம்மால் முடிந்தளவு சேவையை செய்யவேண்டும் என்ற நோக்குடனேயே இக்கலைவிழாவை நடாத்துகிறோம். இதன் மூலம் மாணவரின் ஆளுமைப் பண்புகள் விருத்தியாவதுடன் சமூகமயமாக்கம், நுண்ணறிவு விருத்தி போன்றவற்றிற்கும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்கிறோம். என்பதே எனதும் என்சக, ஆசிரிய ஆசிரியைகளினதும் அபிப்பிராயமாகும்.

எமது பாடசாலையைப் பொறுத்தளவில் எமது மாணவர்கள் மும்மொழியிலும் தேர்ச்சி பெற்றிருப்பினும், தமிழ் இலக்கிய விழாக்களில் அல்லது போட்டிகளில் கலந்து கொள்வதற்கான சந்தர்ப்பங்கள் மிகக்குறைவாகும். எனவே இந்த வகையான கலைவிழாக்களின் மூலமாவது அவர்களுக்கு இந்த சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி கொடுக்கலாம் என்பதே எமது எண்ணமாகும்.

இம்முறை கலைவிழாவின்போது மத்தியமாகாண, ஊவாமாகாண பாடசாலைகளும் கலந்து கொள்வது விழாவுக்கு மேலும் மெருகூட்டும் என்பதுடன் இவ்விழாவுக்கு இம்மலரை வெளியிடவும், விழாவினை சிறப்பாக நடாத்த உதவிய என்சக ஆசிரிய ஆசிரியைகளுக்கும், நலன் விரும்பிகளுக்கும், பெற்றோருக்கும் என்மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

**வாழ்க தமிழ் மொழி!**

**கோ.தங்கராஜா**
(ஆசிரியர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From*

# LUXMI TRADE CENTER

**SOLE AGENT FOR ANCHOR**

No 19, MAIN STREET
BANDARAWELA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## Tamil Literary Association Commeette

Seated: L.R Miss. Violet de silva, Mrs.Shakoor shafid, Mrs.M.G.Peris, Miss.S.Jegapiragasam, Mrs.A.R.Thangiah, **Mr.R.R.Herathghe** (Head master) Mrs.L.Herathghe, Mrs.S.Sundanakrishhan, Mrs.G.M.Roheem, Miss.D.Sebajanam, Mrs.S.Willium
Standing L.R Mas P.Pirasath, Mas K.Sasitharan, Mas.T.Gobinath, Mas.M.Cheluakanthan, Mas.Sabrhag, Mas.Arabath, Mas.S.Sasikumar, Mas.P.Thirukumara, Mas.N.Nagodarshan, Mas.P.Ravi Mas T.Surendran **Mr M.Theannilavu** (Master in charge) Mr. A.Ramanitharan, Mr. M.ChandraKumar Mr. S.Dunaisingh, Mr S.Y.I.B.Wickramasinghe, Mr. G. Thangaraja, Mr C.B.Ekanayake, Mas P.Indranath, Mas. Ramesh
Absenties:-Mrs. S.S.Premkumar, Mrs.L.Panchanathan, Mr.K.Panchthirarajan, Miss.D.F.Christofer



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேராசை பெரும்நட்டம்

கோபாலனும் குமாரும் நல்ல நண்பர்கள். அவர்கள் பாடசாலை செல்கின்றனர். அவர்கள் மிக ஒற்றுமையாக இருப்பார்கள். பாடசாலைக்கு ஒன்றாக செல்வார்கள்.

ஒருநாள் இவர்கள் வழக்கம் போல பாடசாலைக்குச் சென்றனர். அவர்கள் போகும் வழியில் கறுப்பாக ஒரு பொருள் தென்பட்டது. அதை எடுத்தார்கள். அது ஒரு பணப்பை அதை திறந்து பார்க்க குமார் ஆவல் கொண்டான். அதை கோபாலன் தடுத்தான். முதலில் இதில் இருக்கும் பணத்தை கொண்டு எப்படி செலவழிப்பது என்று நினைத்த பின்பு பார்ப்போம். என்றான் கோபாலன் அதுசரி எனக்கு இந்த பணத்தில் பெரிய சாப்பாட்டுக் கடையில் சாப்பிடுவோம் என்றான். குமார் போடா என்மனதில் எவ்வளவு கற்பனை இருக்கின்றது என்றான். கோபாலன் அதை சொல்லு என்றான்.

இலங்கையில் உள்ள சிவனொளி மலைக்கு செல்வோம். சிகிரியாவுக்கு செல்வோம். அங்குள்ள ஓவியங்களை பார்ப்போம். கொழும்புக்குச் சென்று அங்குள்ள இடங்களை பார்ப்போம் என்றான். கோபாலன் மிகுதிப்பணத்தை என்ன செய்வது என்றான். குமார் அப்போது பாடசாலை மணி அடித்தது. பாடசாலையில் படிப்பில் கவனம் செலுத்தவில்லை. அந்த பணப்பையில் தான் கவனம் சென்றது. பாடசாலை விடும் மணி அடித்தது. மீண்டும் குமார் மிகுதி பணத்தை என்ன செய்வது இருவரும் பாதிப்பாதி எடுத்துக்கொள்வோம் என்றான். கோபாலன் இப்பொழுது பணப்பையை திறக்கலாமா என்றான். குமார் பெற்றோரிடம் காட்டிக் கொண்டு திறப்போம் என்றான். கோபாலன் வீட்டுக்கு வந்தனர். பெற்றோரை அழைத்தனர். எல்லோம் வட்டமாக இருந்தனர் கோபாலன் பணப்பையை திறந்து கீழே கொட்டினான். அது ஒரு பழைய பணப்பை. அதிலிருந்து பூச்சிகள் தான் கொட்டின. காசு இல்லை பெற்றோரும் கோபாலனும் குமாரும் பெரும் நட்டம் அடைந்தனர். பேராசை பெரும் நட்டம் என்பதற்கு இந்த கதை ஒரு உதாரணம்

**ஆக்கம் த.நவமுரளி**
**ஆண்டு 6B**
பாடசாலை தூய தோமையர் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From*

## SHANTHI GOLD HOUSE

GOLD & DIAMOND MERCHANT

177, LOWER STREET, BADULLA
SHRI LANA PHONE 055-2191

*With Best Compliments From*

## NEW PUSHPA TRADERS

INPORTERS & EXPORTERS OF AGRICULTURAL PRODUCT
DEALERS IN AGRO CHEMICALS, VEGETABLE SEEDS
FERTILIZERS & SPREYARS

7, BAUDHA mandiraya road
Welimada
Sri lanka

Tel: 057-5049, 057-5059, 057-5389



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நட்பு

படிப்பிலும் பண்பிலும் நட்பு
பள்ளி வாழ்விலும் நட்பு
கடமையை செய்ய நட்பு
கருத்தாய் பழகிட நட்பு

தவறை திருத்திட நட்பு
தன்னை உணர்ந்திட நட்பு
உலகம் அடைந்திட நட்பு

நல்ல நண்பனை தேடு
நலம் பயக்கும் பாரு
இல்லை யேல் தனிமை நாடு
இதுவே உயர்வாம் கூறு

புகழை அடைந்திட நட்பு
பெருமை அடைந்திட நட்பு
தன்னை காத்திடும் நட்பு
செருக்கை அழித்திடும் உண்மை நட்பு

S. சசிகுமார்
ஆண்டு 11B

## கலைக்கமலத்தின் தாமதம்...

வேலைப்பழு காரணமாகவும் தூர இடம் காரணமாகவும் கலைக்கமலம் குறிப்பிட்ட தினத்தில் உங்கள் கைகளில் தவழ மறுத்துவிட்டாள்

ஆனால் சில நாட்கள் தாமதத்தின் பின் அவள் புதுப் பொழிவுடன் எட்டிப்பார்தாள். கவலைகளை மறந்து நான் ஏந்திக் கொண்டேன். உங்களின் நிலையும் அவ்வாறிருக்குமென நம்புகிறேன்

தமிழ் இலக்கிய கலா மன்ற பொறுப்பாசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From*

# V.N.C

(GENERAL MERCHANTS & ALUMINIUM GOODS)

26. MAIN STREET, AGRAPATANA

**Prop. K.Mohan raj (Old Boy)**

St.Thomas College, Bandarawela

*With Best Compliments From*

*Aruna Jewellery*

A-22, NEW BAZAAR STREET
NUWARA-ELIYA
**TEL: 052-2165**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்திய பிரிவு கட்டுரை
போட்டியில் முதல் இடத்தை வென்ற கட்டுரை

# மாணவரும் வாசிப்பு பழக்கமும்

நாம் அனைவரும் மாணவர்களே மாணவர்கள் என்பது சாதாரண சொல் அல்ல. மாணவன் பெற்றோராலும் ஆசிரிய, ஆசிரியைகளாலும் இச்சமுதாயத்திற்காக உருவாக்கப்பட்ட பிரஜைகளுள் ஒருவன்.

நாட்டிற்காகவோ அல்லது இச்சமுதாயத்திற்காகவோ வரவேண்டிய பிரஜை ஒருவன் கல்விச் செல்வத்திலும் ஒழுக்கம், போன்றவற்றிலும் சிறந்து விளங்கவேண்டும். நாம் இவற்றில் கல்வி செல்வத்தில் ஒன்றாகிய வாசிப்புப்பழக்கத்தை பொழுது போக்காகவும் எடுத்துக் கொள்ளலாம். ஏனெனில் இது பொழுது போக்குகளில் சிறந்த பொழுது போக்காகவும் மாணவ மாணவிகளுக்கு சிறந்த பயிற்சியாகவும் இருக்கின்றது. அக்காலத்தில் ஔவையார், கம்பர், திருவள்ளுவர் ஆகியோர் முன்னேற்றத்திற்கு காரணம் வாசிப்பு பழக்கமும் ஒன்றாகும். இதற்கு ஓர் உதாரணத்தை எடுப்போம் இது யாதெனில் ஓர் அறிவாளியாக பலவற்றிலும் சிறந்து விளங்கும் ஒருவனுக்கு நன்றாக வாசிக்க முடியாது. அவன் இறுதி தேர்வு நேரத்தில் புத்தகத்தை பார்த்து பிழை பிழையாகவே படிப்பான். இதற்கு காரணம் அவனுக்கு வாசிக்க முடியாது. இதற்கு இன்னொரு உதாரணத்தையும் எடுத்து கொள்வோம் நாம் ஒரு பேச்சுப் பேட்டியில் பங்கு பற்றியிருப்போமாயின், அதற்கு முதற் தேவை வாசிபேயாகும். இவ்வாசிப்பு பழக்கம் எம்மிடம் இல்லாவிடில் எமக்கு எவ்வறிவும்பயன் கொள்ளமுடியாது

ஒரு மனிதனுக்கு தன் பேச்சு அனைத்தும் உச்சரிப்பும் சரியாக வரமேண்டுமெனில் அவனது உறுப்புகளுள் ஒன்றாகிய பற்களும் நாவும் சீராக இருந்ததெனில் உச்சரிப்புக்கள் சரியாக வரும். **''பல்லுப் போனால் சொல்ப் போச்சு''** என்று கூறுவார்கள்.

அதுபோல் "சொல்லு போனால் வாழ்க்கை போச்சு" என்றே அர்த்தம். இதற்கு ஓர் கதை உண்டு. ஒரு முறை பிரான்சு நாட்டு மன்னனான நெப்போலியன் நூறு பேரை கைது செய்தான். இதற்கு அவனது தளபதி துருக்கியர்கள் நூறு பேரையும் விடுதலை செய்வாரா? கொலை செய்வாரா? என்று கேட்டான். இதனைக் கேட்ட நெப்போலிய அரசன் அவர்கள் அனைவரையும் விடுதலை செய் என்று கூறும் நேரத்தில் தும்மல் வந்தது. அப்பொழுது அனைவரையும் கொல் என்று தவறி கூறிவிட்டான். இதன்விளைவு அனைவரும் கொல்லப்பட்டனர்.

ஆகவே நாம் நம் வாழ்க்கையிலே கல்விச் செல்வத்தில் ஒன்றாகிய வாசிப்பு பழக்கத்தை மேற்கொண்டால் எப்பொழுதும் சிறந்து விளங்கலாம்.

**வாசிப்பு பழக்கத்தால் மனிதன் பூரணமடைகின்றான்**

S.Vijayakanthan
Year-8B



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From*

# G.C.E O/L

## 91 *Batch*

## S.SASIKUMAR

21, GLENLYON BAZAAR
AGRAPATANA

*With Best Compliments From*

# SANTHY TRADERS

21/B, GLENLYON BAZAAR
AGRAPATANA



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்திய பிரிவு
# மேற்பார்வையாளரின் செய்தி

இயல், இசை, நாடகம் என்ற முக்கலைகளும் நாகரீக ஆதிக்கம் காரணமாக பல்வேறு வழிகளில் திரிபடைந்து வருகின்றன. மாணவர்கள் மற்றும் இளம் சந்ததியினர் மத்தியில் மேல் நாட்டு இசை, முக்கலைகளையும் உருமாற்றிச் செல்கின்றது.

இந்நிலையில் மாணாக்கர்கள் மத்தியில் அவர்களின் இலக்கிய கலை ஆற்றலை வளர்க்கும் வகையில் ஆண்டாண்டு தோறும் தூய தோமையர் கல்லூரியில் நடத்தப்படும் கலை விழாவை சிறப்புற வாழ்த்துகின்றேன்

திருமதி.எஸ்.சந்தானகிருஷ்ணன் B.A

## சிந்தனை செய்வாய் மலையகமே!

நீ தரைத்தோற்றத்தில் உயர்ந்து விட்டாய்  
ஏன் இன்னும் தரத்தில் உயரவில்லை  
எப்போது தரத்தில் உயர்வாய்

தரத்தில் மட்டுமின்றிக் கல்வியிலும் கூடன்  
சிந்தனை செய்வாய் மலையகமே  
புறப்படு! புறப்படு!

கரு உலகை ஒளி உலகாக்கு  
சிந்தனை செய்வாய் மலையகமே

ஆக்கம்: து பிரஷாந்  
ஆண்டு 9B



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Wishes to the*
*Tamil Literary Assoaciation*

☆
☆
☆
☆
☆
☆

# BALAKRISHNA STORES

BUYERS OF GOLD AND SILVER AT MODERATE RATE

15, MAIN STREET
AGRAPATHNA

DONATED BY
**S.SASIKUMAR 'O/L 95 , DANUSHAN YEAR 6B.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீருடன்...

1995-06-11 திகதி (சனிக்கிழமை) எமது நெருங்கிய நண்பரான திரு R.சதானந்தன் உயிர்நீர்த்தார். கனவு போல் நடந்து முடிந்து விட்ட இந்த நிகழ்வை நினைக்கும் போது நெஞ்சம் நெகிழ்கிறது. அவருக்காக இலக்கிய கலாமன்றம் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

ரோசா மலர் விளிம்புகளில் அவர் பவனி வந்தாலும் மலரின் இதழ்களிற் கூட காற்பாதங்கள் பதியாது இவ்வாறு தமது ஆசிரிய வாழ்வில் மென்மையாக நடந்து எம் அனைவரினதும் உள்ளத்திலும் அழியாது நிலைத்திருக்கின்ற அவரின் மறைவு எம் இதயங்களை வாட்டுகின்றது.

நமது மாணவர்களின் கல்விப் பசியைப் போக்குவதற்காகவே தனது காலடியை கல்லூரியில் பதித்தார். மண்ணுயிர் காக்க வந்து, பாதி வழியில் தன்னுயிரையே நீத்த அவரின் வரலாறு என்றும் கல்லூரியின் வரலாற்றிலும் பொதிந்திருக்கும்.

அவர் பட்ட துன்பங்கள் ஒவ்வொன்றும் எமது எதிர்கால சந்ததிக்காக வீசப்பட்ட வித்துக்கள். அவை தளிர்விட்டு கிளைவிட்டு, ஓங்கி வளர்ந்து நாளைய சமூகத்தின் கல்விப் பசியைப் போக்கும் கனியாக மாறட்டும்.

அவர் எம்மை விட்டுப் பிரிந்தாலும், அவரின் நினைவுகள் என்றும் எம்முள்ளங்களில் நீங்காப் புகழ் பெற்றிருக்கும். அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும், உறவினர்களின் சுபீட்சமான எதிர்காலத்திற்காகவும் இறைவனை இருகரம் கூப்பி பிரார்த்திப்போமாக!

**தமிழ் இலக்கிய கலாமன்றம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From*

# LOTUS HARDWARE STORES

GENERAL HARDWARE MERCHANTS &
ESTATE SUPPLIERS

DEALERS IN CIC PAINTS
DURO P.V.C PIPES

36, MAIN STREET, HATTON

T.P: 0512-640



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேரு எழுதிய உயில்

நேரு இறப்பதற்கு பத்தாண்டுகட்கு முன்னரே ஒரு உயில் ஒன்று எழுதி வைத்திருந்தார். அந்த மரணசாசனத்தில் அவர் எழுதி வைத்துள்ள விபரம் வருமாறு. இந்திய மக்களின் அளவு கடந்த அன்பை நான் பெற்றேன் செய்யக்கூடியவை அதன் சிறு பகுதிக்குக்கூட ஈடாகாது. அன்பு போன்ற அருமையான பொருளை திருப்பிக் கொடுக்கவும் முடியாது. பலர் போற்றப்பட்டிருக்கின்றனர். சிலர் பூஜிக்கப்பட்டிருக்கின்றனர் ஆனால் இந்திய மக்களின் எல்லாப் பகுதியினரும் என்மீது மட்டற்ற அன்பு செலுத்தினர் இந்த மட்டற்ற அன்பு என்னை அன்புக் கடலில் ஆழ்த்திவிட்டது. நான் வாழும் மிகுதி காலத்தில் என் மக்களுக்கும் அவர்கள் காட்டிய அன்புக்கும் ஏற்ற முறையில் நடந்து கொள்வேன். என்ற நம்பிக்கையை மட்டும்தான் என்னால் வெளியிட முடியம். என் கணக்கற்ற தோழர்களுக்கும் சக ஊழியர்களுக்கும் இதய பூர்வமான நன்றி தெரிவிக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன். பணிகளை நாங்கள் கூட்டமாக மேற்கொண்டோம். இவைகளை இயல்பாகத் தொடரும் வெற்றிகளையும் துக்கங்களையும் நாங்கள் பகிர்ந்து கொண்டோம்.

நான் இறந்த பிறகு எனக்காக மதச்சடங்குகள் செய்யப்படுவதை நான் விரும்பவில்லை. என்பதை நான் பிரகடனப்படுத்த விரும்புகிறேன். அத்தகைய சடங்குகளில் எனக்கு நம்பிக்கை இல்லை சம்பிராயத்தில் இதற்கு உட்படுவதுகூட ஆஷாடபூதித்தனமாகும் நம்மையும் மற்றவர்களை ஏற்றிச் செய்யப்படும் முயற்சியாகும்

நான் இறந்ததும் என் உடலை எரித்துவிட வேண்டும். அன்னிய நாட்டில் நான் இறந்தால் என் உடலை அங்கே எரித்துவிட்டு என் சாம்பலை அலகபாத்துக்கு அனுப்ப வேண்டும். துளி சாம்பலைக்கூட மிச்சம் வைத்திருக்கக்கூடாது அலகபாத்தில் கங்கையில் ஒரு பிடி சாம்பலைப் போடவேண்டும். என்ற என் விருப்பத்திற்கு எந்தவிதமான மத முக்கியத்துவமும். இல்லை இந்த விஷயத்ததில் எனக்கு மத உணர்வே இல்லை. குழந்தைப் பருவத்திலேயே கங்கை யமுனை ஆகிய நதிகள் என்னை கவர்ந்தன நான், வளர்ந்ததை தொடர்ந்து இந்த கவர்ச்சியும் வளர்ந்தது நான் பெரிதும் நேசிக்கும் மலையின் பனிமுடிய சிகரங்களையும் செழுமையான பள்ளத்தாக்குகளையும் கங்கை எனக்கு நினைவூட்டுகின்றது. நமது மகத்தான பாரம்பரியத்தை எண்ணி நான் பெருமைப்படுகிறேன் இந்த விருப்பத்தின் சாட்சியாகவும் இந்தியாவின் கலாச்சார மரபுக்கு நான் செலுத்தும் இறுதி மரியாதையாகவும் என் சாம்பலில் ஒரு பிடியை அலகதாபாத்தில் கங்கையில் போடவேண்டுமென்று நான் வேண்டுகிறேன். இந்தியாவின் கரையைக் கழுவும் மகா சமுத்திரத்திற்கு கங்கை அதைச் சுமந்து செல்லட்டும். என் சாம்பலில் பெரும் பகுதியை விமானத்தில் எடுத்துச் சென்று இந்திய விவசாயிகள் உழைக்கும் வயல்களில் தூவவேண்டும் இந்தச் சாம்பல் இந்திய மண்ணில் கலந்து அடையாளம் கண்டு பிடிக்க முடியாத இந்தியாவின் பகுதியாகட்டும். நேருவின் சாம்பல் இமயம் முதல் குமரி வரை உள்ள மண்ணிலே தூவப்பட்டு இந்திய மண்ணோடு மண்ணாக கலந்துவிட்டது.

ஆசிரியை. Mrs. G.M. ரஹீம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Wishes From*

**CENTRAL MEDICAL STORES**

74, MAIN STREET, HATTON
T.P: 0512-402

*With Best Wishes From*

**CARSON CERAMIC CENTRE**

DEALERS IN HARDWARE LANKA FLOOR TILES WALL TILES PANTRY ITEMS & SANITARY WARE IMPORTERS

44. COLOMBO STREET, KANDY.
T.P: 08-24501

*With Best Wishes From*

**SUNDARAM STORES**

104, D.S.SENANAYAKE VEEDIYA
KANDY
T.P: 08-22156

*With Best Wishes From*

**VASANTHA GRINDING MILL**
(Prop: T.Ramajeyam)

25, WELLAWAYA ROAD,
KOSLANDA.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாட்டுப்பாடல்கள்

இயற்கை வளம் கொஞ்சும் கிராமங்களில் எளிமை வாழ்வு வாழும் உழைப்பொன்றையே பெருஞ் செல்வமெனக் கருதும் மக்களிடையே இயற்கையாகவே கூரிய மதியும், சாமர்த்தியமான பேச்சும் காணப்படுகின்றன. இயற்கையறிவும், கலையுணர்வும் கொண்ட இவர்களின் உள்ளத்திலே பற்பல காரணங்களால் உணர்ச்சிகள் தோன்றி கரைபுரண்டெழும்போது அவை பாடல்களாக வெளிவருகின்றன. அவை ஏடும் எழுத்தாணியும் கொண்டு எழுதப்படுவனவல்ல, பரம்பரை பரம்பரையாக செவிவழியாக கேட்கப்பட்டு வாழ்வை. பாமர மக்களின் உள்ளத்துணர்ச்சியை உயிராகக் கொண்டு கருத்தை விளக்கும் எளிமையோடு கூடி நடப்பவை. இவை இலக்கணவரம்பிற்குட்பட்டு சொற்சாலங் காட்டி மயக்குபவையல்ல. நாட்டு மக்களின் உள்ளத்திலிருந்து வெளிப்படுவதால் இவை நாட்டுப் பாடல்கள் எனப் பெயர் பெற்றன.

ஆதி மனிதன் தன் மனவெழுச்சிகளை வெளிப்படுத்தி இன்பம் பெற ஆடலையும் அதற்கேற்ற பாடலையும் கருவிகளாகக் கொண்டான். எழுத்தும் ஏடும் தோன்றுமுன் உண்டான இப்பாடல்கள் வாய்முறையாக எங்கும் பரவின நாகரீகம் வளர்ந்த போது இசை வல்லோர் அவற்றைப்பின்பற்றி இசையமைப்பு, தாளங்காட்டும் கற்பனைச் செறிவும், சொல்நயமும் கொண்ட பாடல்களை இயற்றினர். வரையறைக்குட்பட்ட நெறிகண்டு சங்கீதக் கலையை வளர்த்தனர் எனவே நாட்டுப்பாடல்கள் சமுதாயத்தில் மூத்ததொரு கலையாவதோடு பண்பட்ட இசைவளர்ச்சிக்கும் மூலமாக விளங்குகிறது.

நாடோடிப்பாடல்கள் சந்தர்ப்பங்களுக்கேற்ப வெளிப்படும் உணர்ச்சிகளைப் பொறுத்துப் பலவகைப்படும்.

நா விழாக்காலங்களில் ஆனந்தக்களிப்போடு பாடும் பாடல்களும்

நா சரித்திர சம்பந்தமான வீரர்களில்தீரச் செயல்களை அடிப்படையாகக் கொண்ட பாடல்களும்

நா பச்சிளங்குழந்தைகளை வளரச்செய்ய மெல்லிசையோடு பாடப்படும் தாலாட்டுப் பாடல்களும்

நா காதற்சுவையும் நகைச்சுவையும் உயிரோட்டமாக மிளிரும் பாடல்களும்

பா கும்மி கோலாட்டம், காவடிச்சிந்து, வில்லுப்பாட்டு, அம்மானை மாரியம்மன்பாட்டு போன்ற பொழுது போக்கும் பாடல்களும் தெய்வ வழிபாட்டிற்காகப் பாடப்படும் பாடல்களும்.

பா மீனவர், குறவர், உழவர், வண்டிக்காரர் போன்ற தொழிலாளர் தொழில் செயும் போது சோர்வு தோன்றாதிருக்க பாடப்படும் பாடல்களும்.

பா இறந்தோருக்காக துயர் நிறைந்த சூழலில் பாடப்படும் ஒப்பாரிப்பாடல்களும் நாட்டுப்பாடல் வகைகளில் சிலவாகும்

பா நாட்டுப்பாடல்கள் கிராமங்களுக்குக் கிராமம் மாறுபடுவதுமல்லாது அக் கிராமச் சிறப்பையும் எடுத்துக்கூறும் விதமாயும் காணப்படுகின்றன

நாட்டுப்பாடல்கள் இலக்கியத்துறையில் பெருமதிக்கத்தைப் பெற்றுள்ளன. பெரும் புலவர்களும் இசைவல்லோரும் நாட்டுப்பாடல் இசைமுறையைத் தழுவி பல பாடல்களை இயற்றியுள்ளனர். சுருங்கக் கூறின் நாட்டுப்பாடல்கள் பாமரமக்களின் உணர்ச்சியில் உதித்து அவர்களுடன் இரண்டறக்கலந்து எளிமையோடும், இசையமைப்போடும் உதவுகின்றன. நாகரீகம் கரைபுரண்டோடும் தற்காலத்தில் நாட்டுப்பாடல்கள் அழியாவண்ணம் அவற்றை பேணிப்பாதுகாப்பது கலையார்வம் கொண்ட யாவரதும் கடமையாகும்.

திருமதி. S.S. பிரேமகுதமார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From*

# Gowri TEX

WHOLESALE RETAILS TEXTILES

**FAIROZE SUPER MARKET**
No. 237-2/10 SECOND FLOOR
MAIN STREET, COLOMBO-11.

**TEL: 433567**

*With Best Compliments From*

# GRAND HOTEL

**FOR COMFORTABLE ROOMS,**
**DELICIOUS FOODS COURTESY SERVICE**
**FOR YOUR WEDDING AND OTHER FUNCTION**

POONAGALA ROAD, BANDARAWELA

**T.P: 057-2564**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகத்தில் சமாதானம்

பல கோடி மக்கள் வாழும் இவ்வுலகில்
பார்த்த இடமெல்லாம் பரிதாபக்கோலம்
பார் முழுதும் பல விதத்தில் மரணம்
பசியினால் மரணம் போர்ப் பசியினால் மரணம்

மண் ஆசையில் அழிந்தது பலகோடி
பொன் ஆசையில் அழிந்தது மறுகோடி
பெண் ஆசையில் அழிந்தது மற்றொருகோடி
புகழாசையில் அழிந்தது இன்னொருகோடி

அழிவுக்குக் காரணம் ஆசைகள் அதிகம்
ஆசை அடக்கின் அழிவு அழியும்
நான் எனும் அகந்தை நம்மிடம் அழிந்ததால்
நாடு நலம் பெறும் நலமுடன் வாழலாம்

நான்கு வேதமும் கூறும் நற்சிந்தனைகளை
நல்லொழுக்கங்களை நாடு கடைப்பிடித்தால்
நாட்டில் சுபீட்சம் நிலவும், நாடு செழிக்கும்
நமக்கும் சமாதானம் கிடைக்கும்

ஆசிரியை திருமதி டீ.பஞ்சனாதன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Wishes From*

# New Paris Textile

DEALERS IN TEXTILES

07, Kotmale Road, Nawalapitiya. Tel: 0542-465

Branch:

SWISS EMPORIUM, No. 18, Gampola Road, Nawalapitiya.

*With Best Wishes From*

ESTED - 1903

# E.MOHAMED CANY SAIBO & CO

**DEALERS IN ENAMELLED WINDING WIRE & GENERAL HARDWARE**

98, 99 MAIN STREET, HATTON

**TEL:- 0512-452**

*With Best Wishes From*

# ANANTHA STORES

WHOLESALE AND RETAIL DEALERS
GENERAL MERCHANTS &
COMMISSION AGENTS

534, NUWARAELIYA ROAD,
PUSSELLAWA
TEL: 08-78210


*With Best Wishes From*

# RAZANA SHOE PALACE

No. 1 AMBAGAMUWA ROAD
NAWALAPITIYA.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"செந்தமிழ் நாடெனும் போதினிலே
இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே"

எவரையும் மயக்கக்கூடியது இசை. தாவரங்கள் கூட இசைக்கு ஆட்படுகின்றன.

அவ்வகையிலே இன்பத்தமிழிற்கும் தனியிடம் உண்டு. ஒளவையார்கூட இறைவனிடம் கேட்பது சங்கத்தமிழ் மூன்றையும் தான்"

எனவே நாமும் எமது மாணவர்களின் இயல் இசை, நாடக ஆர்வத்தை வளர்த்தெடுக்க எமக்கு உதவுவது கலைவிழாவாகும். மாணவர்களினை சமூகத்திற்கு பொருத்தமான பிரஜையாக்குவதுதான் ஆசிரியர்களின் பணியாகும். அல்லாவிடில் மாணவர்கள் கிணற்றுத்தவளைகள்போல் இருந்து அவர்களின் மாணவப்பருவத்தை கடந்து விடுவார்கள்.

நாம் கல்விச்சுற்றுலாவை மேற்கொண்டு சென்ற பொழுது, தாகசாந்தி செய்வதற்காக மாணவர்களை கிணற்றடிக்கு அழைத்துச்சென்றபோது, மாணவனொருவனின் கேள்வி என்னை வியப்பிற்குஉள்ளாக்கியது. கிணற்று நீரினுள் தவளை இருக்கின்றது எப்படி அந்நீரை குடிப்பது? இதற்கான பதில் உங்களிடம்?

மாணவர்கள் அறிய வேண்டியது இந்நவீன உலகத்தில் சொல்லுமளவன்று அத்துடன் பெற்றோர்கள் உங்களது பிள்ளைகளை வெளியுலகத்திற்கு எடுத்துவரவேண்டிய பொறுப்பு உங்களிடமும் உண்டு. என்பதைமறந்து விடாதீர்கள்.

மாணவர்கள் நிகழ்ச்சிகளை அவதானிப்பதைவிட அவர்களே நிகழ்ச்சிகளை தயாரித்தளிப்பது அவர்களுக்கு நல்ல அனுபவத்தை ஏற்படுத்தும். எனவே அவர்களின் முயற்சி வெற்றி பெற என் நல்லாசிகள்.

ஆசிரியர் M.சந்திரகுமார். (Sc.Tr)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From*

Nimal N.Peris (J.P) Provincial Correspondent of Srilanka Rupavahini Corpertion

# TELE-PIX (PVT) LTD

**VIDEOGRAPHERS, PHOTOGRAPHERS AND ELECTRONIC ENGINEERS**

164, PERADEINIYA ROAD KANDY

TEL: 08-25762, 34355, 34026, 072-20204, 072-20724, FAX: 08-34355

*With Best Compliments From*

# STAR TRADE CENTER

**DEALERS FOR SINGER PRODUCTS**

325, MAIN STREET, PASSARA

TEL: 055-8304, 8323

*With Best Compliments From*

# EASTERN HARDWARE

27, MAIN STREET, HATTON

**T.P: 0512-376**

*With Best Compliments From*

# SRI MURUGAN GRINDING MILLS

263, MAIN STREET, BANDRAWELA

**T.P: 057-2532**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்பித்தலை வெற்றிகரமாக நிறைவு செய்ய பின்பற்ற வேண்டிய சில வழிமுறைகள்

1. கற்றலுக்குரிய விடயங்களைச் சிறிய அலகுகளாக வகுத்துக் கொள்ளல்.

2. இலகுவானதிலிருந்து கடினமானதுக்குச் செல்லும் முறையில் அலகுகளை மாணவர்களுக்குப் படிமுறையாகச் சமர்ப்பித்தல்.

3. மாணவனின் வயது அடிப்படையிலன்றி அவன் கற்றலுக்கு எவ்வாறான தயார் நிலையில் உள்ளான் என்ற அடிப்படையில் மாணவனுக்கு எதனைக் கற்பிக்க வேண்டும் என்பதைத் தீர்மானித்தல்.

4. தெளிவான அறிவினைப் பெறுவதற்கு ஆரம்ப விடயங்களையும் அதோடு தொடர்பான அம்சங்களையும் தேடி அறிந்து கொள்ள மாணவனை ஊக்குவித்தல்.

5. மாணவனை மையமாக வைத்து கல்வி அளிப்பதுடன் அவனது தனியாள் வேறுபாட்டிலும் கவனம் செலுத்துதல்.

6. மாணவனை கற்றலில் சுறுசுறுப்பாகப் பங்கு கொள்ளச் செய்தல்.

7. கற்பித்தவற்றைத் தெளிவாகவிளங்கிக் கொண்டனரா என்பதை அறிய பரீட்சைகளை நடாத்தல்

8. மாணவன் செய்யும் பயிற்சிகளை உடனுக்குடன் பார்த்து புள்ளியிட்டு ஒப்படைத்தல்.

9. மிகவேகம் குறைவாகக் கற்கும் மாணவர்கள் தைரியம் இழக்காத வகையில் பாடங்களைத் தயாரித்து அத்தகைய மாணவர்களும் வெற்றிகரமாகக் கற்றலை மேற்கொள்ள வகை செய்தல்.

10. தாம் விடும் பிழைகளை தாமாகவே அறிந்து அதற்கேற்ற பரிகாரத்தை தாமாக செய்து கொள்ளும் பொறுப்பை அவர்களிடம் ஒப்படைத்தல் ஆசிரியர் இல்லாத போதும் பொறுப்புடன் செயல்பட பயிற்றுவித்தல்.

ஆசிரியர் அருணாசலம் இரமணீதரன் B.sc. (Agri)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From*

**T.S.KARUPPAIAH & BROTHERS**

19, MAIN STREET, BALLEKETUWA
TEL: 055-5126

*With Best Compliments From*

NEW MOHAN'S

DEALERS IN ANGLO ASIAN FERTILIZERS, AGRO CHEMICALS
POULTARY MANURE, LIME, SEEDS, COIR PRODUCT
DIRECT DEALERS IN: J.E.D.B FERTILIZERS

48, MAIN STREET, KANDAPOLA
T.P: 052-2035

*With Best Compliments From*

GOWRI TRADERS

173, MAIN STREET,
BANDARAWELA.

*With Best Compliments From*

*Priya Jewellery*

DEALERS IN 22 KARAT JEWELLERS & EVER SILVER

121/1, MAIN STREET, BANDARAWELA
TEL: 057-2304



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றும் புகழ்வோமே!

பாரதி நீயும்
பாடி மறைந்து
பற்பல ஆண்டுகள்
பறந்து விட்டன

பாரத தேசத்திற்கும்
பாரினில் வாழ்வோருக்கும்
பாரிபைந்தமிழினில் மொழிக்கும் நீ
பண்புடன் பாடிச் சென்றாய்

அடிமைத் தனத்தை
அடியோடு மறுத்த
அவனியில் நீயும்
ஆண்டவனருளால்
அவதரித்தாயோ...!

அன்னைத் தமிழில்
அருந்தவப் புதல்வனாய்
அவதரித்த எங்கள் பாரதி
அன்று நீ

துயில் கொண்ட தமிழினத்தில்
துயிலை நீக்கி வைத்தாய்
துயர்கொண்ட தமிழர்களின்
துயர் நீங்கச் செய்தாய்

செந்தமிழ் பெருமைதனைச்
செகத்திற்கும் பரப்பி நல்ல
சீரான வாழ்கைக்கு நீயும்
சித்திரமாய் திகழ்ந்தாய்

இன்பத் தமிழ் இலக்கியத்தில்
இனிது விளையாடி நல்ல
இனிமையான கவிதைகளை
இவ்வுலகத்திற்கு தந்தாய்

அன்று தோன்றிய
இன்பம் வாழும் எங்கள்
அழியாப் பாரதியின்
புகழினை நாம் என்றும்
புகழ்வோம்! என்றும் புகழ்வோம்!
என்னும் புகழ்வோம்!

ஆசிரியத் செல்வி M.D செபஞானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From*

# NEW ARUNAHS STEEL

**DEALERS IN HARDWARE, ELECTRICAL, ASBESTOES SHEETS**
**CEMENT, PAINTS, AND ESTATE SUPPLIERS**

No 84, MAIN STREET, BANDARAWELA
TEL: 057-2401

*With Best Compliments From*

# VENUS JEWELLERS

**DEALERS IN 22 KT JEWELS & EVERSILVER ITEMS**

141, MAIN STREET, BANDARWELA,
**TEL: 057-2547**

*With Best Compliments From*

# WESTERNS

**(TEXTILE)**

32&34, KANDY ROAD,
NUWARA ELIYA.

*With Best Compliments From*

# Krishna Textile

35, MAIN STREET,
BANDARAWELA
**T.P: 057-2573**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் கண்ட பாரதி

சுப்பிரமணியப் பாதியார் சிறந்த தமிழ்ப் புலவர். இவர் தமிழ் நாட்டில் எட்டயபுரத்தில் பிறந்தார். இவரது தந்தையின் பெயர் சின்னசாமி ஐயர். தாயாரின் பெயர் இலக்குமி அம்மாள். அவர் சிறுவயதிலேயே சுவை நிறைந்த பாடல்களைப் பாடினார். தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம், இந்தி ஆகிய மொழிகளைக் கற்றார் அம்மொழிகளுள் அவருக்கு தமிழிலேயே விருப்பம் அதிகமாக இருந்தது. பாரதியார் எப்போதும் மகிழ்ச்சியுடன் இருப்பார். எல்லோரிடமும் இனிய மொழி பேசி அன்பாகப் பழகுவார்.

"அச்சமில்லை அச்சமில்லை அச்சம் என்பதில்லையே" என்ற பாடலைப் பாடி எம்மிடம் உள்ள பய உணர்வைப் விரட்டி உள்ளார் பாப்பா பாட்டின் மூலம்

"ஓடி விளையாடு பாப்பா—நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா"

என்று எங்களுக்கு சுறுசுப்பை உணர்த்துகின்றார்

"பொய் சொல்லக் கூடாது பாப்பா என்றும் புறஞ் சொல்லல் ஆகாது பாப்பா

என்ற உயர்வான கருத்துக்களை அழகு தமிழில் எங்களுக்கு பாடலாக பாடியுள்ளார் பாரதி

B.டினேஷ்
ஆண்டு 3B

# கல்வியின் நோக்கங்கள்

கல்வியானது என்றென்றும் எம்மை விட்டுப்பிரியாத அருஞ்செல்வம் இதன் நோக்கமானது இன்று வேலை வாய்ப்வை மையமாகக் கொண்டு மாறிவருவமு வருத்தத்திற்குரிய ஒரு விடயமாகும் வேலைவாய்ப்புக்களானவை கல்வியின் ஓர் அமிசமே தவிர கல்வியின் நோக்கம் வேலைவாய்பாக மாறக்கூடாது.

கல்விச்சாலையை விட்டு வெளியேறும் மாணவன் இவ்வளவுத்தான் கல்வி என்று வரம்பிட்டு விடாது இன்னும் நிறையைக் கற்க வேண்டும் எனும் வேட்கையை அவனுள் விதைத்து அனுப்பவேண்டும் ஒரு மனிதனை வாழ்க்கைக்குத் தயாரானவனாக அனுப்புதல் கல்வி நோக்கங்களில் முக்கியமானது இதனை விட மானிடனை மனிதாபிமானமுள்ளவனாக மாற்றியமைக்க வழியமைக்கதாகும் இதன் முக்கிய இலக்கான அமைதல் இன்றியமையாதது இன்று உலகமே பல்வேறு ஒழுக்கக் குறைபாடுடைய சமூகமாக திகழ்வதற்கு முரண்பாடுடைய கல்வித்திட்டங்களும் காரணங்களாக அமைந்திருக்கின்றது.

நாளைய மானிட வாழ்வின் நல்வாழ்வுக்கு கல்விக் கொள்கைகள் நெகிழ்வடையக் கூடியதாக காணப்படுதல் அத்தியாயவசியமானது. ஒழுக்கத்தை வளர்த்தல் பெரியோரை மதித்தல் ஏனையயோருக்கு தீங்கு விளைவிக்காதிருத்தல் போன்ற நற்பண்புகளை தன்னிச்சையாகவே உருவாக்கக கூடிய வகையில் கல்வியான நோக்குகளும் போக்குகளும் அமைவதால் அவசியமாகின்றது எனவே நவீன உலகின் சவாலை திடகாத்திரமாக எதிர்கொள்ள கல்வி வழி சமைப்பது எப்போதும் நயம் பயக்கும்

ஆசிரியர் சரவணமுத்து துணைசிங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From*

**MR. V. PUTHIRASIGAMONEY**

MINISTER OF EDUCATION
CENTRAL PROVINCIAL COUNCIL
NUWARAELIYA

*With Best Compliments From*

**KAVITHAS COMPLEX**

C2, LAWSON STREET
NUWARA ELIYA
**PHONE: 052-2419, 3234**

*With Best Compliments From*

**S.INDTRAAS**

**ALL KIND OF MEDICAL THINGS AVAILABLE HERE**

26, BRIDWEL BAZAR
BOGAWANTALAWA

***All Kind of Medical things available here***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிமிர்ந்து அமர்வதில் உண்டாகும் உண்மைகள்

மாணவரின் ஒழுக்கம் அறிவு என்பன வளருமிடமாக பாடசாலை விளங்குகிறது அங்கே நாம் கற்கும் அறிவுடன் ஒழுக்கமும் கலந்து பாடசாலை விட்டு வெளியேறும் வரை எம்முடன் தொடர்ந்து எம் வாழ்விலும் வந்து கலந்து விடுகின்றது.

அவற்றுள் நாம் கற்கவேண்டியதில் நாம் அமர்வதில் கடைப்பிடிக்கவேண்டிய பல விதிகள் உள்ளன. மாணவர்கள் வகுப்பறையில் அமர்ந்திருக்கும் போது முதுகை வில் போன்று வளைத்து மேசையில் குப்புறச் சாய்ந்திருந்தும் கால்களை நீட்டி பின்பக்கமாக சாய்ந்தும் கன்னத்தில் கை வைத்து பகற்கனவு காண்பவர்கள் போலவும் அமர்ந்திருப்பாகள்.

இவர்கள் தங்கள் உடலை மட்டுமல்லாது உள்ளத்தையும் ஒரு நிலையில்லாது கெடுத்துக் கொள்கிறார்கள். கல்வியை உற்சாகமாக கற்பதில் அவர்களுக்கு கஸ்டம் ஏற்படுகிறது. மற்ற மாணவனுக்கு இடையூறாக அமைவான். எவ்வளவுக்கு நிமிர்ந்து உட்காரப் பழகுகிறானோ அந்த மாணவன் விளையாட்டிலும் சரி எந்த நிகழ்விலும் சிறந்த பலனை பெறுவான்.

புழுக்களுக்கு எலும்பில்லை அவை தம் இஸ்டத்திற்கு உடலை வளைத்துக் கொண்டிருக்கின்றன. முதுகெலும்பு உறுதியில்லாதவன் எந்த கெட்ட செயலுக்கும் வளைந்து கொடுப்பவனாக காணப்படுவான்

உடல் உறுதி பெற்றால் உள்ளம் உறுதிபெறும். நம் உள்ளத்தைக் கண்ணால் காண முடியாது. அதனால் நம்முன்னே தெரியும் உடலை உறுதியாக்கப் பழகிக் கொள்வோம்.

திரும்ப திரும்ப நல்ல செயலைச் செய்வது பயிற்சி. அப்பயிற்சி இயல்பாக மாறி விடுகிறது. அது அவனுடைய பண்பாகவும் மாறிவிடும்.

எம்முடல் ஐம்பது வயதின் பின் வளைந்தாலும் எம் உள்ளம் மட்டும் என்றும் வளையாது. நேராக வளரும் மரம் எவ்வளவுக்கு பிரயோசனைப்படுகின்றதோ அதோபோல் நிமிர்ந்து வளரும் எம்முடலும் பயனைத்தரும் என்பதில் ஐயமேதுமில்லை.

Teacher: Miss Sumithra Jegapiragasam



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From*

**OLD BOYS**

13, NORTH LANE
BADULLA

*With Best Compliments From*

**LANKA HARDWARE STORES**

19, BAZAAR STREET,
BADULLA

**T.P: 055-2344**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Tamil Medium Staff

Seated L.R
Mrs. A.R.Thangiah, Miss M.D.Sebajnanam, Mrs.S.William, Mrs.M.G.Peris Miss Violet de Silva Mrs. Shakoor Shafid, Miss S.Jegapiragasam, Mrs.G.M. Raheem,
Standing L.R Mr. S.Dunaisingh, M.C.B.Ekenayake, Mr.A.Ramanitharan, Mr.M.Theannilavu, Mr.S.Y.I.S. Wickramasinghe, Mr.G.Thangaraj, Mr.M.Chandrakumar

Absentees:-
Mrs. S.Sandanakrishan (Middle School Supevisior) Mrs S.S Preamkumar, Miss D.F.Christofer,
Mr. S.K.Panchenthirarajan,Mrs.L.Panchanathan.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தந்தையைப் பற்றி மகன்மார் கணிப்பது

5-6 வயது: என் தந்தையால் செய்ய முடியாத காரியம் ஒன்றும் இல்லை.

7-9 வயது: என் தந்தைக்கு பல விடயங்கள் பற்றி நன்கு தெரியும்

10-11 வயது: என் தந்தைக்கு எல்லா விடயம் பற்றியும் தெரியாது.

12-13 வயது: என் தந்தைக்கு ஒன்றுமே தெரியாது.

14-20 வயது: அவரா? அவருக்கு காலம் மாறியது எங்கே புரிகிறது.

21-24 வயது: கிடக்கிறது கிழம் அவரிடம் போய் யோசனை கேட்பதா.

25-29 வயது: ஏதோ கொஞ்சம் தெரியும்

30-34 வயது: அவர் என்ன நினைக்கிறார் என்பதை தெரிந்து கொள்ளுதல் தப்பில்லையே

35-50 வயது: என் தந்தையிடம் யோசனை கேட்டு முடிவு செய்யலாம்.

50-60 வயது: என் தந்தை எவ்விஷயத்திலும் எவ்வளவு சிறப்பாக தீர்மானம் எடுப்பார் தெரியுமா?

60-65 வயது: அவர் இல்லாதது உண்மையிலேயோ பெரிய கஸ்டமாக உள்ளது

60-65 வயது அவரின் அறிவும் அனுபவமும் எங்கே? நாம் எங்கே?

திருக்குமரா
ஆண்டு 11B



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From*

**A - I**

**GOLD CUTTING CENTRE**

**New Vertical & Diamond Machine Cutting & Bangles Bending**

2A/7, HAPUTALE ROAD
(COLIN BUILDING)
BANDARAWELA

*With Best Compliments From*

*Madusha Textile*

**Wholesale & Retail Dealers in Textile**

147/1, Keyzer Plaza Super Market,
Keyzer Street
Colombo-11
Tel: 336531, 327249

*With Best Compliments From*

**CHITRAS**

**Dealers in Textile & Fancy Goods**

18, SHOPPING COMPLEX, BANDARAWELA
TEL: 057-3097
BRANCH
**APSARA TRADERS**
5, HAPUTALE RD, BANDARAWELLA TEL: 057-3097

*With Best Compliments From*

**A.N.P.TEXTILE**

DEALERS IN TEXTILE WRIST WATCHERS IN FANCY GOODS, GIFTS ITEMS
STATIONERIES, DECORATED
GOODS AND LADIES ITEMS TEXTILES, PHOTO COPPIES SERVICES

9, MAIN STREET, NANUOYA
TEL: 052-2110




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொன்மொழிகள்

மலையின் அடிவாரத்திலிருந்து
உச்சிவரை ஏறுவதுதான்
கடினம். ஆனால் இறங்குவது
சுலபம். அதே போலத்தான்
வாழ்விலும் உயர்ச்சி அடைவது
தான் கடினம்.

அதிக ஞாபக சக்தி இருந்தால்
மட்டுமே பொய் சொல்லுங்கள்
ஏனெனில் இன்று
பொய் சொல்லும் நீங்கள்
அதை மறந்து நாளை
வேறொன்று சொல்லிவிடுவீர்கள்.
எல்லாவற்றிலும் பார்க்க உண்மை
பேசுவதே சிறந்தது.

வாழ்க்கையில் பல வழிகளில்
நம்மை உயர்த்துவது
நாம் பெற்ற கல்வியுடன்
கலந்த ஒழுக்கமேதான்.

சு.எ. சுபேந்திரன்
ஆண்டு 7B

## மனித வாழ்வும் விஞ்ஞானமும்

இலக்கியம், விஞ்ஞானம், ஆத்மஞானம் எனும் முத்துறைகளினால் மனிதனுடைய வாழ்வு முழுமை பெறுகின்றது. அவற்றுள் ஒன்றை நீக்கி ஒன்றை நீக்கி ஒன்றை போற்றுவதனால் மனிதனுடைய வாழ்வு முழுமை பெறுவதில்லை. இலக்கியம் போன்ற கலைகள் எமது உள்ளத்தை விரிவுபடுத்தி மனித ஆற்றல்களை வெளிக்காட்டி நற்பண்புகளை வளர்க்கின்றன. இதே போன்று விஞ்ஞானம் மனிதனுக்கு வாழ்க்கை வசதிகளையளித்து மனிதனுடைய முன்னேற்றத்திற்கு உறுதுணை புரிகின்றது. ஆத்மஞானம் இலக்கியப் பண்புகளையும் விஞ்ஞானப் பண்புகளையும் இணைத்து அவையிரண்டுக்கும் அப்பால் தன்னை உணர வழி வகுக்கின்றது.

இன்றைய காலத்தில் மனிதனுடைய வளர்ச்சிக்கு சிறந்த தோழனாகவும் அதே வேளை அதனை கணப்பொழுதில் அழித்தொழிக்கும் பயங்கர சக்தியாகவும் விஞ்ஞானம் மக்களிடையே பின்னிப் பிணைந்துள்ளது. காட்டிலே விலங்கு நிலையில் வாழ்ந்த மனிதனை கோள்களுக்கு பிரயாணம் செய்யும் அளவுக்கு வளர்த்தது விஞ்ஞானம். இவ் வளர்ச்சியனைத்தையும் கணப்பொழுதில் அழித்தும் விஞ்ஞானத்தையே சாரும்.

விஞ்ஞானம் கடலைப் போல் ஆழமும் அகலமும் உடைய அறிவுத்தொகுதியாகும். மனிதன் தோன்றிய நாள்முதல் இன்றுவரை பற்பல இன்னல்களை எதிர்நோக்கி பல்வேறு துறைகளில் வளர்ந்த பெருமை விஞ்ஞானத்தையே சாரும் இன்றைய மனித வாழ்வோடு "உயிரும் உடலும்" போல பின்னிப் பிணைந்து காணப்படுகின்றது. பிற்போக்கான கிராமங்களில் கூட விஞ்ஞானம் பரவியிருப்பதை காணமுடிகின்றது.

ஆசிரியை திருமதி.S.வில்லியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From*

# National Auto Centres

**DISTRIBUTORS & DEALERS OF**
**MUNCHEE BISCUITS, ANCHOR PRODUCT & COMMISSION AGENTS**

148A, LOWER STREET, BADULLA.
**TEL: 055-2077**

*With Best Compliments From*

# Kugan Stores

No 71, MAIN STREET,
BANDARAWELA.

*With Best Compliments From*

# ඩබලිව්.එම්.ශ්‍රියානන්ද

එළවළු - අර්තාපල් තොග සහ
සිල්ලර වෙළෙන්දෝ

41/5. රෝහල් පටුමග
හාවාඑළිය
නුවරඑළිය

දුරකථනය 052-3014
නිවස 052-2350



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மிருகங்களின் பாற் பெயர்கள்

கடுவன் - குரங்கு, யானை என்பவற்றின் ஆண்

ஒருத்தல் - கரடி, புலி, பன்றி, மரை என்பவற்றின் ஆண்

கலை - மானின் ஆண்

களிறு - யானையின் ஆண்

பகடு - எருமை, மாடு என்பவற்றின் ஆண்

ஏறு - மாடு, எருமை, பன்றி என்பவற்றின் ஆண்

ஓரி - நரியின் ஆண்

பிடி - யானையின் பெண்

பிணை - மான், பன்றி என்பவற்றின் பெண்

பெட்டை - கழுதை, குதிரை, ஒட்டகம், சிங்கம் என்பவற்றின் பெண்

மந்தி - குரங்கின் பெண்

பிணா - நாய், பன்றி என்பவற்றின் பெண்

நாகு - எருமை. மாடு என்பவற்றின் பெண்

Sivachenthuran
Year 5B



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From*

# Subramanium Jewellery

(DEALERS IN GOLD JEWELLERY)

48, MAIN STREET,
HAPUTALE

**T.P: 057-8058**

*With Best Compliments From*

# LANKA INN

**TOURIST GUEST HOUSE**

RACE COURSE ROAD
BADULLA

**T.P: 055-3169**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான் வளர்த்த செல்லப்பிராணியின் சோகக்கதை

நான் வளர்க்கும் செல்லப்பிராணி நாய்க்குட்டியாகும் அதன் பெயர் ரெம்மி. பால் போன்று வெள்ளை நிறம் உடையது. ரெம்மியின் கழுத்தில் ஒரு ரூபாய் நாணயம் அளவில் மறு ஒன்று இருக்கின்றது. நான் பாடசாலைக்கு செல்லும் போது எனது பின்னால் ஓடிவரும். எனது வீட்டுப்படலை வரை வந்து நின்று என்னை வழி அனுப்பி வைக்கும். நான் பாடசாலை விட்டு வரும் வரை என்னை வழி அனுப்பிவைக்கும். நான் பாடசாலை விட்டு வரும் வரை என்னை ஆவலோடு பார்த்துக் கொண்டிருக்கும். நானும் ரெம்மியும் நாள்தோறும் மாலையில் விளையாடுவோம். நான் பந்தை வீசுவேன் ரெம்மி ஓடிச்சென்று பந்தை வாயில் கௌவி எடுத்துவந்து என்னிடம் தரும். நான் உறங்கும் அறையிலேயே ரெம்மியியும் உறங்கும். எங்கள் வீட்டிற்கு யாராவது புதிதாய் வந்தால் அவர்களது வருகையை குரைத்துக் குரைத்துக் தெரிவிக்கும். நான் ரெம்மிக்கு நாள் தோறும் சத்துணவுகளை கொடுத்து வருகிறேன். இறைச்சி, சோறு, மீன் போன்றவற்றை ரெம்மி விரும்பி உண்ணும். ரெம்மியின் கொழுகொழுவென்ற செழிப்பான வளர்ச்சி அதற்கு தகுந்த சான்றாகும்.

ஒருநாள் நானும் ரெம்மியும் மாலையில் விளையாடிக் கொண்டிருக்கும் போது நான் எறிந்த பந்து தெருவில் விழுந்துவிட்டது. அதை ரெம்மி எடுத்து வருவதற்கு தெருவிற்கு ஓடிச்சென்றது. தெருவின் குறுக்கே ஓடிச்சென்ற ரெம்மியை அங்கே வேகமாக வந்து கொண்டிருந்த மினிபஸ் அடித்து விட்டது. மினிபஸ்ஸின் சக்கரங்களில் ரெம்மி அகப்பட்டு கண்ணால் காதால் இரத்தம் சொட்ட ரெம்மி இறந்து கிடந்தது. இதைப் பார்த்த நான் மிகவும் வருத்தப்பட்டேன். எனது அன்பை ரெம்மியின் ஆத்மா சாந்திக்காக பிரார்த்தித்தேன்.

**D.Jaiananth**
**Year 5B**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From*

*MAS T. SURENDRAN*

**(G.C.E(O/L)'95)**

**S.THOMA'S COLLEGE**

**BANDARAWELA**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புறம்பேசாதே
# பொய் சொல்லாதே

நமக்கு பல விதமான நல்ல எண்ணங்கள் நல்ல செயல்களை செய்ய உதவும். வேறு சில கெட்ட என்னங்கள் கெட்ட காரியங்களைச் செய்யத் தூண்டும். இவ்வுலக மக்களில் அனேகமானோரிடையே கெட்ட எண்ணங்கள் சில இருந்து வருகின்றன. அக் கெட்ட எண்ணங்களில் புறம் பேசுதல் ஒன்றாகும். இதன் மூலம் சண்டைகளும் மனஸ்தாபங்களும், நம்பிக்கையற்ற தன்மையையும் ஏற்படுகின்றது. ஒருவரின் மனம் வேதனைபடும் படி புறம் பேசுதலை நாம் தடுக்க வேண்டும் ஒரு மனிதன் குறையை அவன் இல்லாத நேரத்தில் பேசுவது புறம் பேசுதலாகும்.

புறம் பேசும் ஒருவனை எவரும் அவர்கள் விருப்பத்தின் பேரிலோ அல்லது ஏதாவது காரணத்தை கொண்டோ மன்னிப்பதில்லை யாரைப்பற்றி புறம் பேசினானோ அவரிடம் மன்னிப்பு பெறும் வரை புறம் பேசியவரை யாரும் மன்னிக்கமாட்டார்கள்.

ஒரு சில மனிதன் செய்யாத காரியத்திற்காக, அவன் பேரில் குற்றம் சாட்டுவார்கள். அதுவும் அவன் இல்லாத நேரத்திலேயே குற்றச்சாட்டை கூறுவார்கள். இது பொய் சொல்வதாகும்.

மாணவர்களாகிய நாங்கள் பொய் சொல்லுவதும் ஒட்டுக் கேட்பதும், புறம் சொல்லுவதும் கொடிய தீய செயல்கள் என்பதை மனதில் வைத்துக் கொண்டு, இப்படியான செயல்களைச் செய்யாமல், நல்ல மாணவர்களாக வளர்ந்து ஒரு நல்ல சமுதாய மக்களாக இவ்வுலகில் வாழ்ந்து காட்டவேண்டும்.

ஆக்கம்
**ஜெ.கஜேந்திரன்**
ஆண்டு 9B



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From*

GANESHAR STORES
ALL KIND GROSARIES THINGS AVAILABLE HERE

No 5A, CARGILLS GROUND
NUWARA ELIYA

*With Best Compliments From*

JONY VIDEO
BECAUSE
COSTOMERS KNOWS BEST

75 1/1, DHARMAWIJAYA MAWATTA
BANDARAWELA

*With Best Compliments From*

CIMCO METAL CENTER

405, SRI SANGARAJA MAWATHA
COLOMBO-10
TEL: 549493

*With Best Compliments From*

BETHLEHEM STORES
GENERAL HARDWARE MERCHANTS

83, MAIN STREET
RATHNAPURA
TEL: 045-2124



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எழுபது வகை பிணிகளை நீக்கும் தர்மம்

1. கன்னத்தில் கை வைத்து உறங்காதீர்கள்.

2. அதிகமாக தூங்க வேண்டாம்.

3. இருட்டில் உணவு உண்ண வேண்டாம்.

4. பூமி அதிரும் படி நடக்கவேண்டாம்.

5. அநாதைகளின் பொருட்களை அநியாயமாக அபகரிக்காதீர்கள்

6. உங்கள் பெண்கள் மீது உங்களுக்குரிய கடமைகளையும் உங்களுடைய பெண்களுக்கு இருக்கும் உங்கள் மீது உரிமைகளையும் பேணி நடந்து கொள்ளுங்கள்.

7. தர்மமானது எழுபதுவகை பிணிகளை நீக்குகின்றது.

8. உன் சகோதரனை நோக்கி நீ புன்னகை செய்வதும் ஒரு தர்மமே ஆகும்.

9. அழைப்பின்றி விருந்துக்கு செல்பவன் திருடனாக நுழைந்து கொள்ளைக்காரனாக வெறியேறுவார்

10. செல்வந்தர்களை விட ஏழைகளே 50 வருடங்களுக்கு முன்னர் சொர்க்கம் புகுவார்கள்

**By T.Tharanee Daran**
Year 5B

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கற்க கசடறக் கற்க கற்றபின் நிற்க அதற்கு தக"

தமிழ் சிங்கள-ஆங்கில பாடசாலைப் புத்தகங்கள் பாடசாலை உபகரணங்கள் காரியாலய உபகரணங்கள் வாழ்த்து மடல்கள் தமிழக எழுத்தாளர்களின் நாவல்கள் வார மாத சஞ்சிகைகள் செய்தித்தாழ்கள் அச்சுக்கூட கடுதாசி வகைகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றிட நீங்கள் நம்பிக்கையுடன் நாட வேண்டிய ஸ்தாபனம்

போட்டோ பிரதிகள் லெமினேட்டிங் வேலைகள் உடனுக்குடன் செய்து கொடுக்கப்படும்



# பராசக்தி ஏஜென்சீஸ்

இல 71 பிரரதான வீதி

பண்டாரவளை தொலைபேசி 057-2370




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புறம்பேசாதே
# பொய் சொல்லாதே

நமக்கு பல விதமான நல்ல எண்ணங்கள் நல்ல செயல்களை செய்ய உதவும். வேறு சில கெட்ட என்னங்கள் கெட்ட காரியங்களைச் செய்யத் தூண்டும். இவ்வுலக மக்களில் அனேகமானோரிடையே கெட்ட எண்ணங்கள் சில இருந்து வருகின்றன. அக் கெட்ட எண்ணங்களில் புறம் பேசுதல் ஒன்றாகும். இதன் மூலம் சண்டைகளும் மனஸ்தாபங்களும், நம்பிக்கையற்ற தன்மையையும் ஏற்படுகின்றது. ஒருவரின் மனம் வேதனைபடும் படி புறம் பேசுதலை நாம் தடுக்க வேண்டும் ஒரு மனிதன் குறையை அவன் இல்லாத நேரத்தில் பேசுவது புறம் பேசுதலாகும்.

புறம் பேசும் ஒருவனை எவரும் அவர்கள் விருப்பத்தின் பேரிலோ அல்லது ஏதாவது காரணத்தை கொண்டோ மன்னிப்பதில்லை யாரைப்பற்றி புறம் பேசினானோ அவரிடம் மன்னிப்பு பெறும் வரை புறம் பேசியவரை யாரும் மன்னிக்கமாட்டார்கள்.

ஒரு சில மனிதன் செய்யாத காரியத்திற்காக, அவன் பேரில் குற்றம் சாட்டுவார்கள். அதுவும் அவன் இல்லாத நேரத்திலேயே குற்றச்சாட்டை கூறுவார்கள். இது பொய் சொல்வதாகும்.

மாணவர்களாகிய நாங்கள் பொய் சொல்லுவதும் ஒட்டுக் கேட்பதும், புறம் சொல்லுவதும் கொடிய தீய செயல்கள் என்பதை மனதில் வைத்துக் கொண்டு, இப்படியான செயல்களைச் செய்யாமல், நல்ல மாணவர்களாக வளர்ந்து ஒரு நல்ல சமுதாய மக்களாக இவ்வுலகில் வாழ்ந்து காட்டவேண்டும்.

ஆக்கம்
**ஜெ.கஜேந்திரன்**
ஆண்டு 9B



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From*

GANESHAR STORES

ALL KIND GROSARIES THINGS AVAILABLE HERE

No 5A, CARGILLS GROUND
NUWARA ELIYA

*With Best Compliments From*

JONY VIDEO

BECAUSE
COSTOMERS KNOWS BEST

75 1/1, DHARMAWIJAYA MAWATTA
BANDARAWELA

*With Best Compliments From*

CIMCO METAL CENTER

405, SRI SANGARAJA MAWATHA
COLOMBO-10
TEL: 549493

*With Best Compliments From*

BETHLEHEM STORES

GENERAL HARDWARE MERCHANTS

83, MAIN STREET
RATHNAPURA
TEL: 045-2124




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாம்பும் ஆமையும்

ஓர் ஊரில் ஒரு பாம்பும் ஆமையும் வாழ்ந்தது. ஒரு நாள் அங்கு ஆட்சி செய்த ராஜா மீன் அறந்து விட்டது. பிறகு இந்த பாம்பும் ஆமையும் ஆட்சி செய்வதற்று கண்டை பிடித்து பாம்பு கொத்தும்போதெல்லாம் ஆமை தலையை உள்ளே இழுத்துக் கொள்ளும். ஒரு நாள் பாம்பு ஆமையுடன் சண்டைபிடிக்கும் போது "திருத்து நிறுத்து" என்று கூறிவிட்டு "நீ எப்படி நாம் சண்டை செய்யும் போது உன் தலையை எடுத்துக் கொள்ளுகிறாய். நான் கொத்திக் கொத்திப் பார்க்கிறோன். நீ இறக்கவே இல்லையே. அது எப்படி" என்று கேட்டது. உடனே ஆமை "நீ சண்டை செய்யும் போது நான் என் தலையை கத்தியால் வெட்டிக்கொள்ளுவேன். சண்டை முடிந்தாலும் எனக்கு இன்னுமொருதலை முளைக்கும் என்றது. பாம்பும் அதை நம்பி தன் கழுத்தை வெட்டியது. உடனே துடிதுடித்து இறந்தது. ஆமை அரசனாக்கி நீண்ட ஆட்சி செய்தது.

தயாரிப்பு கு.நந்தகுமார்

அனைவரும் எங்கள்
விளம்பரதாரர்களை
ஆதரியுங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From*

**RAJA RAVINDRAN**

36, FIRST LANE
MIHINDUGAMA
RATNAPURA

*With Best Compliments From*

**SAMALA TYRE WORKS**

12, PRIVATE BUS STAND
RATNAPURA

*With Best Compliments From*

**SELVA JEWELLERS**

42A MAIN STREET,
RATNAPURA

TEL: 2848

*With Best Compliments From*

**DELAN TRADERS**

24, PULUNGOPITIYA
RATNAPURA



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்க்கை எனும் நான்கெழுத்து

பிறப்பு எனும் நான்கெழுத்து

குழந்தை எனும் நான்கெழுத்து

தொட்டில் எனும் நான்கெழுத்து

மாணவன் எனும் நான்கெழுத்து

படிப்பு எனும் நான்கெழுத்து

வாலிபர் எனும் நான்கெழுத்து

முதியோர் எனும் நான்கெழுத்து இறுதியில்


மரணம் எனும் நான்கெழுத்து

ஆக்கம்
பெ.சதிஸ்குமார்
ஆண்டு 10B



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From*



# ARUNAS AGRO CHEMICALS

DEALERS IN AGRO CHEMICAL
FERTILIZER AND HARDWARE ITEMS
IMPORTERS OF SEED POTATOES

75-77, MAIN STREET,
BANDARAWELA

BRANCH
NEW ARUNAS STEEL
84, MAIN STREET
BANDARAWELA



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் கண்ட வித்தியாசமான கனவு


பண்டாரவளை நகரம் வறட்சியால் என்றுமில்லாதவாறு இம்முறை கடுமையாக பாதிக்கப்பட்டு கொண்டு இருந்தது.இதற்கு எங்கள் பாடசாலையான தூயதோமையர் கல்லூரியும் விதிவிலக்கல்ல. பாடசாலையின் கிணறுகள் யாவும் வரட்சியால் முற்றாக வற்றி விட்டது. குழாயில் குடிக்க நீரில்லை. விடுதி மாணவர்கள் குளித்து நாட்கணக்காகி விட்டது. ஏன் நாமும் தான் நான் விளையாடி விட்டு தாகத்துடன் வீடு வந்து சேர்ந்தேன். நா வரண்டு தண்ணீர் தண்ணீர் என உளறினேன். நகர சபையால் வழங்கப்பட்ட சொற்ப நீரை குடத்தில் இருந்து கோப்பையில் எடுத்து துளியும் வீணாகாமல் குடித்து களைப்புடன் கட்டிலில் சாய்ந்தேன். இவ்வரட்சிக்கு முடிவுகட்ட வேண்டும். வகுப்பில் நானும் நண்பனும் கடுமையாக யோசித்தோம். திட்டம் தயாரானது. எனது வகுப்பாசிரியையிடமும் பாடசாலை அதிபரிடமும் தெரிவித்தோம். அனுமதி வழங்கப்பட்டது. ஆகாயத்தில் சென்று மேகங்களை ஒன்று சேர்த்து ஒருங்கு வித்து குளிர்வித்தலே எமது பாரியதிட்டம். இதற்கு பாடசாலை விஞ்ஞான ஆய்வுகூடத்தில் காணப்பட்ட இரசாயனங்களை கொண்டு ஒரு சேர்வையை உருவாக்கினோம்.. இதை மேலே கொண்டு செல்ல எமது வகுப்பு மாணவர் ஒன்று சேர்ந்து பாரிய விண்கலம் ஒன்றை அல்லும் பகலும் முயற்சித்து பாடசாலை உள்ளக விளையாட்டரங்கில் உருவாக்கினர். பின்னர் இது மைதானத்திற்கு கொண்டு செல்லப்பட்டது. நானும் நண்பன் ரிசாத்துமே விண்கலத்தை செலுத்தும் வின்வெளிவீரர்கள் திங்கட்கிழமை 12ம் திகதி 8.30 நிமிடத்தில் பெருந்திரளான மக்கள் முன்னிலையில் விண்வெளி உடையிலும் தலைக்கவசத்துடனும் அதிபர் ஆசிரியர்கள் வாழ்த்த விண்கலம் ஏறினோம். மணி 8.45 நிமிடம் அதிபர் திரு.R.R.Rஹேரத்கே அவர்கள் கட்டுப்பாட்டறையில் பொத்தானை அழுத்த விண்கலம் இடியோசையுடன் வானில் பாய்ந்தது மணி 9.05! குறித்த இடத்தில் சேர்வையை வானில் பரவச் செய்தோம். பின்னர் விண்கலத்தைக் தரை நோக்கி செலுத்தினோம். வானிலை மாறியது. மேகம் நகரின் மேலாக ஒன்று சேரத் தொடங்கி, பின் கறுத்து விண்கலம் வெற்றிகாமாக பெரும் ஆரவாரத்தின் மத்தியில் தரை இறங்கியது. அதிபர் எங்கள் இருவரையும் மிக மகிழ்ச்சியுடன் வாழ்த்தி மகிழ்ச்சியை குறிக்குமுகமாக ஒன்று கூடும் போதே மழை துளி விழத்தொடங்கியது கன்னத்தில் குளிர்ச்சியாக நீர் படவிழித்தேன்! திடுக்கிட்டுபார்த்தபோது அங்கே என் பப்பி முகத்தை நக்கிக் கொண்டிருந்தது.

**T.கிஸ்ண கோபி**
ஆண்டு 5B



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From*




**AINKARAN TRADE CENTER**

SOLE AGENTS: MUNCHEE BISCUIT & SUDESHI SOAP

51, MAIN STREET
BANDARAWELA

*With Best Compliments From*



***Ajenthaa Jewellers***

JEWELLERY MERCHANTS

46/D, NUWARA-ELIYA ROAD
WELIMADA



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மொழியின் இனிமை

அகிலத்தில் தோன்றிய அழகிய மொழிகளில் அமிழ்தினுமினிய தமிழ் மொழி தனியிடம் பெறுகின்றது. கல் தோன்றி மண் தோன்றாக்காலத்திலே முன் தோன்றிய மூத்த தமிழ் என முன்னுள்ளோர் கூட கூற வியலாத மூப்பு தமிழுக்குண்டு. அம்மட்டமன்றி இனிமை இளமை என்பவைகளை அதன் புறத்தேயும் ஆழ அகத்தேயும் கொண்ட தமிழை வர்ணிக்க வார்த்தைகளில்லை.

புரட்சிக்கவி கண்ட புண்ணிய மொழி பாவேந்தன் கண்ட பாரத மொழி கவிச்சக்கரவர்த்தி கண்ட சங்க மொழி தமிழ் மொழியே ஆண்றோர் கண்ட அதே தரத்தோடு இன்னும் இருக்கவில்லை. இருநூற்றிருபத்தேழு அதாவது உயிரும் மெய்யும் உயிர் மெய்யும் ஆயுதம் சேர்ந்த எழுத்துக்களாக இருந்த போதிலும், இன்னும் கூட ஆராய்ச்சி மன்றங்கள் மூலம் உயர்ந்து வளர்ந்து சிறக்கிறது.

தமிழின் இனிமையினை அறிய இனிமைத்தமிழ் மொழியெது எமக்கின்பம் தரும்படி வாய்ந்த நல்ல அமுது என்று பாவேந்தர் பாரதிதாசன் பாடிய பாவை குறிப்பிடலாம். தோற்றம் தெரியாத பழமை தமிழுக்குண்டு இருப்பினும் அத்துணை பழமையிலும் அதன் இளமை குன்றவில்லை குன்றவுமாட்டாது

தமிழின் பழைமை அறிந்திட சங்ககால இலக்கியங்கள் இருந்து கொண்டிருக்கின்றன. சுவர் இருந்தால்தான் சித்திரம் வரையலாம். அதேபோல் தமிழில் சுவை இருந்தால்தான் கவிபுனையலாம். ஆகவே இதிலிருந்து தமிழின் சுவையை ஓரளவு அறிந்து கொள்ள முடிகிறதல்லவா?


தமிழைப்பொறுத்த வரை இலக்கியம் கண்ட பிறகே இலக்கணம் கண்டது தமிழ் எனவேதான் யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் கானோம் என்று பாரதி குறித்து பாடியுள்ளார் உண்மையிலேயே புரட்சிகவி பல மொழிகள் தெரிந்திருந்தன. ஆகையால் அவரின் கூற்றை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டியிருக்கிறது. புலவர்கள் எப்பொழுதும் தான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்ற கொள்கையுடையவர்கள். இதனை வைத்து நோக்கும் போது தமிழுக்கு சுவை இருப்பது மேலும் தெளிவாகிறது எனவே அமுதாம் தமிழை ஐயந்திரிபுறக் கற்று அகிலத்தில் நற்பலனைப் பெறுவோமாக

ஆக்கம்
சு.சசிகுமார்
G.C.E. (O/L 95)
ஆண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From*



# M.P.S JEWELLERY

DEALERS IN 22ct GOLD JEWELLERY SILVER GOODS
WRIST WATCHES, WALL CLOCKS, CAMERAS, ALL KIND OF
PHOTO FILM ROLLS, & AUDIO REECORDING CASSET PICES

**LICENCED PAWN BROKERS**

21, MAIN STREET,
NANU OYA

TEL: 052-2127

**WE UNDER TAKE PHOTO COPY + LAMINATING**
**CLEAR + QUICK SERVICE**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆக்கப் பணிகளுக்கு அணு சக்தி

இரண்டாம் உலகப் பெரும் போரை முடிவுக்கு கொண்டுவந்த பெருமை அணுக்குண்டு என்னும் பயங்கரப்படைக்கலத்திற்கே உரியது. இரண்டாம் உலகப்போரில் அமெரிக்கா யப்பானிலுள்ள ஹீரோசிமா, நாகசாகி என்னும் இரு நகரங்களின் மீதும் அணுக்குண்டைப் பொழிந்து அவற்றை பாழடைந்த நகரங்களாக்கியது. புல் பூண்டுகள் கூட முளைக்கும் தகுதியற்றவையாக அந்த நகரங்கள் நாசமாக்கப்பட்டன. அணு சக்தி பெற்றெடுத்த அதிபயங்கர அணுக்குண்டு பல்கிப் பெருகுமானால் மனிதகுலம் ஆண்டுடாண்டு காலமாக கட்டியெழுப்பிய நாகரியம் நொடிப்பொழுதில் வேரோடு அழித்து போய்விடும் எனவே அணுவிற்பிறக்கும் ஆற்றலை ஆக்க முயற்சிக்குப் பயன்படுத்தும் வழிமுறைகளைக் கண்டுபிடிப்பது அவசியமாகும்.

உலகிலுள்ள பொருட்களெல்லாம் மிகச்சிறிய பொருட்களாலான அணுக்களால் ஆக்கப்பட்டுள்ளன அணுக்களை மேலும் சிறிய கூறுகளாக்க பகுக்கமுடியாது. இல்வாறு ஜோன் டோல்ரன் முன்வைத்த அணுக்கொள்கையயே நீண்டகாலம் நிலவி வந்தது பின்வந்த விஞ்ஞானிகள் அணுவின் உள்ளமைப்பை நுண்ணியதாக ஆராய்ந்து கண்டறிந்தனர். புரோத்தன் நியூத்திரனை இலத்திரன்கள் நீள் வட்டப்பதைகளில் சுற்றி வருகின்றன என்பதைம் கண்டறிந்தனர். பூமியும் ஏனைய கோள்களும் சூரியனைப் சுற்றிவருவது போல இலத்திரன்கள் அணுகருவைச் சுற்றி வருகின்றன என்று கருதப்படுகின்றது.

அணு மிகுந்த ஆற்றலைக் கொண்டுள்ளது. அணுவைப்பிளக்கும் போது எல்லையற்ற ஆற்றல் வெளிவிடப்படும் இவ்வாற்றலைக் கட்டுப்படுத்தாவிட்டால் பேரழிவு ஏற்படும். வெளிவரும் ஆற்றலைக் கட்டுப்படுத்தினால் சீரிய ஆக்கத்தினை வழங்கும். இன்று நாம் காணும் உலக நாகரீகம் பல்வேறு மூலை வகைகளையும் அவை கொண்டு உற்பத்தி செய்த பல வாழ்க்கைச் சாதனைகளையும் அடித்தளமாகக் கொண்டு கட்டப்பட்டது. இவ்வடித்தளம் விஞ்ஞானத்தால் வலுப்பெற்றதாகும். மனிதனின் அடிப்படை தேவைகள் உணவு, உடை, உறையுள் மட்டுமன்றி ஏனைய நாகரீக சாதனைகளாகும். இந் நன்கொடைகளின் உற்பத்தி நிலையங்களான தொழிற்கூட்டங்களது இயக்கத்தினால் பயன்படும் நிலக்கரி, பெற்றோல், முதலிய எரிபொருட்கள் என்றுமே வற்றாத ஊற்றுக்களைக் கொண்டவையல்ல.

மக்கள் பெருக்கத்தையும் அவர்கள் தேவைகளையும், உற்பத்தி செய்யும் இயந்திரங்களின் வளர்ச்சியும் எண்ணிப் பார்க்கும் போது இவ் வெரிபொருட்கள் இன்றோ நாளையோ தீர்ந்து போகலாம், இதற்கு பதிலாக மாற்று எரிபொருட்களைக் கண்டறிய வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. இத்தேவையை நிறைவு செய்ய வைப்பது அணு ஆற்றலே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று எமக்கு பயன்படும் ஆற்றலை வாழ்வுக்கு மின்சாரமாக்கும் எரிபொருட்களின் வெப்பத்தால் நீரை ஆவியாக்கி நீரைக்கொண்டு மின்சுழலிகளைச் சுழலச் செய்து அவற்றோடு இணைக்கப்பட்ட மின் உற்பத்தியில் கருவிகளை இயக்கி மின்உற்பத்தி செய்யப்படுகின்றன இதற்குப் பதிலாக அணுவைப்பிளக்கும் போது கிடைக்கும் வெப்பத்தை பயன் படுத்தி மின்உற்பத்தி செய்யலாம். இவ்வாறு மின்னை உற்பத்தி செய்வதற்கு ஆகும் செலவு குறைவாக இருக்கும் எனவே ஓரளவு மின்னின் விலை ஒப்பீட்டளவில் மிகக் குறைவாக இருக்கும்.

அணுவைப் பிளக்கும் போது காமாக்கதிர்கள் போன்ற பல கதிர்கள் தோன்றுகின்றன. அக்கதிர்கள் சூழலில் பரவும் போது பல தீய விளைவுகள் உண்டாகின்றன. இவ்விளைவுகள் இன்று வாழும் சந்ததியினருக்கு மட்டுமன்றி பரம்பரையாகத் தோன்ற இருக்கும் சந்ததியினரையும் பாதிக்கும் இத்தீய விளைவுகளை மனித இனம் யப்பானில் அனுபவித்து அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு என்பார்கள். அணுக்கதிர் வீச்சும் அதற்கு விலக்கல்ல. அளவு பயன்படுத்தப்பட்ட கதிர் வீசல் உயிர்காக்கும் அமிர்த சஞ்சீவியாகும். பல்வேறு நோய்களைக் குணப்படுத்த அணுக்கதிர் பயன்படுத்தப்படுகின்றது ஆறாத புண்களை ஆற்றுதல் கிருமிகளை அழித்தல், உடல் உறுப்புகளில் இயக்கத்தைச் சீராக்குதல் முதலிய பல்வேறு மருத்துவ பணிகளுக்கு அணுக்கதிர் வீசல் பயன்படுகிறது.

அணு ஆற்றலின் முதற் குழந்தை அணுக்குண்டு இது அணுவைப் பிளப்பால் உண்டானது. அனுவை சேர்ப்பதாலும் பேரளவு சக்தி கிடைக்கின்றது. இதன் விளைவாக நீராகக் குண்டுகள் உருவாக்கியுள்ளன. இவற்றால் விளையும் பேரழிவை உலகம் நன்கு உணர்ந்துள்ளது. எனவே அணுப்பிளப்புச் சக்தி அணுச் சேர்க்கை சக்தியால் தம்மையோ அழித்துக் கொள்ளுமாறு உலகை காக்கும் முயற்சியில் உலகு வல்லரசுகள் ---ஆனாலும் காரணமாகும் பேரசுகள் இரகசியமாக பயங்கரமான ஆயுதங்களையும் உற்பத்தி செய்தே வருகின்றன அவற்றை அவை பயன்படுத்தாமல் இருக்க உலகம் ஒன்று திரண்டு குரல் கொடுப்பதோடு ஆக்க வழிக்கு அணு ஆற்றலை திசைதிருப்பக் கோரியும் குரல் கொடுக்கவேண்டும்.

**மு.இர்பான்**
G.C.E. (OL 95)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிய விளையாட்டுக்கள் இது வரை நடைபெற்ற இடங்களும் நாடுகளும்.

| | | |
|---|---|---|
| 1951 | டில்கி | இந்தியா |
| 1954 | மனிலா | பிலிப்பைன்ஸ் |
| 1956 | டோக்கியோ | யப்பான் |
| 1962 | ஜகார்த்தா | இந்தோனேசியா |
| 1966 | பேங்கோக் | தாய்லாந்து |
| 1970 | பேங்கோக் | தாய்லாந்து |
| 1974 | தெஹ்ரான் | ஈரான் |
| 1978 | பேங்கோக் | தாய்லாந்து |
| 1982 | டில்லி | இந்தியா |
| 1986 | சியோல் | தென்கொரியா |
| 1990 | பீக்கிங் | சீனா |
| 1994 | ஹீரோசிமா | ஜப்பான் |



G.Suresh
year-6B

## அன்னை இந்திரா காந்தி

இந்திரா என்றால் இந்தியா என்பார்கள். இந்தியா என்றால் இந்திரா என்பார்கள். இவர் ஜவகர்லால் நேருவின் ஏகப் புதல்வி. 1966ம் ஆண்டு இந்தியாவின் பிரதமரானார். அவர் 17 வருடங்களாக அருந்து இந்தியாவிற்கு பெரும் சேவையை செய்தார். அன்னை இந்திராவுக்கு சஞ்சய்காந்தி, ராஜீவ்காந்தி என இரண்டு புதல்வர்கள் இருந்தார்கள். சஞ்சய் காந்தி விமான விபத்தொன்றில் இறந்துவிட்டார். இந்தியாவின் பிரதமராக வந்த ராஜீவ் காந்தி குண்டு வெடிப்பினால் கொல்லப்பட்டார்.

அன்னைஇந்திரா 1984ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 31ம் திகதி தனது மெய்பாதுகாவலர்களின் துப்பாக்கிச் சூட்டினால் கொல்லப்பட்டார் நாட்டிற்காகவே தனது உயிரை தியாகம் செய்தார். சமாதானப் புறாவான அன்னையை உலகத்தலைவர்கள் அணைவரும் மதிக்கின்றனர்.

W.கிளௌரன்ஸ்
Year 5B



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From*

# SARATHA TRADING

**GENERAL MERCHANTS, WHOLESALE & RETAIL**

No 1, SHOPPING COMPLEX
BANDRAWELA.
**TEL: 057-2196**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# G.C.E O/L 95



Seated left to right:- T.Guhaneshan, K.Pradeepan, P.M.Thiru Kumara, S.Sasi Kumar, Mr.M.Chandrakumar (Class teacher) Mr.M.Theannilavu (Master in Charge) T.Surendran, I.M.Arafath, P.Ravi, M.I.S.M.Irfan

Standing 1st row:- G.Gration, J.Roshan, S.M.M.Firthowg, T.Gration, C.Chelvakanthan, K.Mahinda Kumar, S.Sabeson, M.Gokularanjan, N.Blessing, V.Patrick, A.L.Gobi, S.Roshanth, J.Kinston, S.Saravanan, A.Rooban, J.Donalt, M.I.M.Raiyzudeen, S.Subaeshan

Standers 2nd row:- N.Shantheeban, D.M.Gazgali, M.S.Irshad


Standers 3rd row:- D.Anton, M.A.Abdul Cader, P.Gopinath

Absentees:- S.Shatheesh Kumar, P.Thashingthan, P.Mohanakanthan



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஒரு வசுவண்டியின் சுயசரிதை

இதோ சிறு பிள்ளைகள் ஓடி வந்து என்னைத் தொட்டு விளையாடப்போகிறார்கள் என்று மகிழ்ந்த என்னை ச்சீ இதில் கரி ஒட்டுகிறது ஒரே அழுக்கு வேண்டாம். வேறு விளையாட்டு விளையாடுவோம் என்று அவர்கள் கூறியது. மிக வேதனை அளித்தது. நான் முன்பு இருந்த நிலை அவர்கள் அறிவார்களா?

சுமார் 5 ஆண்டுகளுக்கு முன் பலரது முயற்சியினாலும், கைவண்ணத்தாலும் அழகிய வசு வண்டியாக நானும், எனது நண்பர்களும் உண்டானோம். எங்களை பாதுகாப்போடு வைத்திருந்தார்கள். பின்பு பயணிகளை ஏற்றிச்செல்லும் பணிக்கு எங்களை அமர்த்தினார்கள். நண்பர்களைப் பிரிந்தாலும் நல்லசேவை செய்வதை எண்ணி நான் மிகவும் மகிழ்ந்தேன் என்னைச் செலுத்துபவரும் என்னை மிகவும் அன்பாக நடத்தினார். என்மேல் எந்தக்காயமும் படாமல் கவனமாக நடத்தினார். தினமும் என்னைக்கழுவி துடைத்து, உணவு தந்து சீராட்டினார்.

இவ்வேளையில் ஒருநாள் நான் பயணிகளைச் சுமந்து செல்ல சாரதி ஒரு காட்டுப் பாதையில் என்னைச் செலுத்திக்கொண்டிருந்தார். திடீரென்று சிலர் வந்து என்னை நிறுத்தி சாரதியையும், பயணிகளையும் அடித்து விரட்டிவிட்டு என்மேல் ஏதோ திரவத்தை வீசி, தீப்பந்தத்தை என்மேல் எறிந்தார்கள். ஐயோ, என்மேல் தீப்பற்றிக்கொண்டது. நான் அழுது துடித்தேன். என்னைக்காப்பாற்ற யாருமே இருக்கவில்லை. அப்பொழுது திடீரென மழை பெய்ய ஆரம்பித்தது. ஆதனால் நான் முற்றாக எரியாமல் குற்றுயிராக மயக்கத்தில் இருந்தேன். என்றாலும் எனது அங்கங்கள் செயல் இழந்து மறுபடியும் சேவைக்கு என்னை ஏற்கமுடியாத அளவு அங்கவீனனாகி விட்டேன்.

இந்நிலையில்தான் என்னை நான் இப்போது இருக்கும் இந்த இடத்தில் கொண்டுவந்து போட்டார்கள். அன்றிலிருந்து என் பழைய வாழ்க்கையை நினைத்து கண்ணீர் விட்டபடி பெருமூச்சோடு இங்கே காலம் கழிக்கிறேன்.

**Janagan**
Year- 5B



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From*

**SRI LANKA STORES**



10, MAIN STREET
MADULSIMA
TEL: 055-5833

*With Best Compliments From*

**UNITED SUPPLIES CENTRE**

SUPPLIERS
STOCK 1ST OF

A-6/01, Abdul Hameed Street
Colombo-12

*With Best Compliments From*



**P.L.M PALANIYAPPA CHETTIAR & SONS**

(MILK COLLECTORS & TRANSPORTERS)

5,RADHA BUILDING
KOTAGALA
TEL: 0512-418



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்மொழியும் இலக்கியமும்

| | |
|---|---|
| தமிழில் தோன்றிய முதல் இலக்கண நூல் | - தொல்காப்பியம் |
| திருக்குறளை இயற்றியவர் | - திருவள்ளுவர் |
| திருக்குறளின் மூன்று பிரிவுகள் | - அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் |
| அதன் அதிகாரங்கள் | - அறத்துப்பால்—38 அதிகாரங்கள்<br>பொருட்பால்— 70 அதிகாரங்கள்<br>காமத்துப்பால்— 25 அதிகாரங்கள் |
| மொத்த குறட்பாக்கள் | - 1330 குறள்கள் |
| திருக்குறள் மொழி பெயர்க்கப்பட்டுள்ள மொழிகளின் எண்ணிக்கை | - 83 மொழிகள் |
| சீறாப்புராணத்தை இயற்றியவர் | - உமறுப்புலவர் |
| சிலப்பதிகாரத்தை இயற்றியவர் | - இளங்கோஅடிகள் |
| கந்தபுராணத்தை இயற்றியவர் | - கச்சியப்ப சிவாச்சாரியார் |
| திருவிளையாடற்புராணங்களை இயற்றியவர் | - புலியூர் நம்பி, பவணந்தி முனிவர் |
| நன்னூல் எனும் இலக்கண நூலை இயற்றியவர் | - பவணந்தி முனிவர் |
| அரிச்சந்திர புராணத்தை பாடியவர் | - வீரகவிராயகர் |
| நளவெண்பா பாடியவர் | - புகழேந்தி புலவர் |
| இரகுவம்சம் பாடியவர் | - அரச கேசரி |
| பெரிய புராணம் பாடியவர் | - சேக்கிழார் |
| நிகண்டுகள் என்பது | - அகராதிகள் தோன்ற முன்னர் தமிழ் சொற்களின் பொருளை அறிய பயன்படுத்திய நூல்கள். |
| கலம்பகம் என்பது | - பல பூக்களை தொடுத்து மாலை செய்வது போல பலவகையான செய்யுள்களையும் உறுப்புகளையும் சேர்த்து அகப்பொருள், புறப்பொருள் கலந்து இயற்றப்பட்ட இலக்கியம் |
| ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி, பிள்ளைத்தமிழ் ஆகிய நூல்களை எழுதியவர் | - ஔவையார். |
| தமிழில் தனித்தமிழ் நடையை ஆரம்பித்தவர் | - மறைமலையடிகள் |
| தமிழ் நாடகத் தந்தை | - பம்மல் சம்பந்த முதலியார் |
| வசனநடை கைவந்த வள்ளலார் | - ஆறுமுகநாவலர் |
| முதலில் தமிழ் அகராதியை தொகுத்தவர் | - குகதிரவேற்பிள்ளை |

ஆக்கம்
K.Kumuthan
ஆண்டு 10B



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From*

**KAVITHA TRANSPORT & S.P & TRADERS**

No 7, MAIN STREET
AGRAPATANA

*With Best Compliments From*

**SRI MURUGAN STORES**

No 95, MAIN STREET
BANDARAWELA

*With Best Compliments From*

**mitta** photo copies
**LICENSED PAWN BROKERS**
**STATIONERIES & LAMINATION**

9, CENTRAL MARKET, NUWARA ELIYA

*With Best Compliments From*

*Dhevi Jeweller & Bankers*

24-4/1, 1st Floor
New Bazaar Street
Nuwara-Eliya



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலக அதிசயங்கள்

உலகப் புதினங்களை மூன்று வகைப்படுத்தி ஆராயலாம்.

1. நவீனகாலம்
2. மத்திய காலம்
3. புராணகாலம்

## நவீன கால அதிசயங்கள்

1. குபுவின் பிரமிட்
2. கொன்ஸ்தாந்தி நோபில் நகரிலுள்ள ஹேஜியா சோபிய
3. இத்தாலி பைசா நகரிலுள்ள— சாய்வு கோபுரம்
4. இந்தியாவில் ஆக்ராவிலுள்ள— தாஜ்மகால்
5. வசிங்டனிலுள்ள நினைவு மாளிகை
6. பிரான்ஸ் நாட்டில் பரிஸ் நகரில் காணப்படும் ஈபல்கோபுரம்
7. உலகில் உயர்ந்த கட்டிடம் அண்மைக்காலம் வரை
நியுயோக்கிலுள்ள — எம்பயர் ஸ்டேட் கட்டிடம்.

## மத்தியகால அதிசயங்கள்

1 இத்தாலி ரோமிலுள்ள கொளோசியம்
2. எகிப்தில் அலெக்சாண்ரியாவிலுள்ள சுரங்கப்பாதை
3. சீனாவிலுள்ள சீனப் பெருஞ்சுவர்.
4. இங்கிலாந்தில் சேகரிக்கப்பட்டிருந்த சிற்பங்கள்
5. நாங்கிங்கிலுள்ள சாய்வு கோபுரம்
6. பைசா நகர்க் கோபுரம்
7. ஹேஜியா சோமியா— கொன்ஸ்தாந்தி நோபில்.

## புராண காலப் புதினங்கள்

1. எகிப்து நாட்டிலுள்ள பூந்தோட்டம்
2. சுமேரிய நாகரிக காலத்தில்— பபிலோனியாவிலுள்ள தொங்கு பூங்கா.
3. எபேசசிலுள்ள ஆர்மிஸ் கோயில்
4. ரோடசிலுள்ள கோலோஸஸ்
5. ஒலிம்பியாவிலுள்ள சியுஸ்சிலை
6. கெலிக்கர் நகரிலுள்ள பாரோஸ் விளக்குக்கம்பம்.
7. அலெக்சாரியாவிலுள்ள பாரஸ் விளக்குக்கம்பம்

ஆக்கம்

த.சிவமுரளி

ஆண்டு 9B



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From*

# C.D PLY IMPORTS

IMPORTERS OF PLY WOODS FORMICA GENERAL
HARDWARE MERCHANTS

60, RANAWANA ROAD
KATUGASTOTA
TEL: 99667



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "எழில் கொஞ்சும் மலையகமே"

"மலையகமே" வெண்பனி பொழியும் போது, கிழக்கில் சூரியன்
உதிக்கும் போதும் அவை உன்னை
துயிலெழுப்புவது போல் இருக்கின்றது

"மலையகமே" ஈழத்தாயின் செல்லக்குழந்தை என்றால் அது
நீதான். உன்பச்சை உடை உன்னை மேலும்
அழகூட்டுகிறது.

"மலையகமே" உன்னழகைக்கண்டு அதிசயிப்பான் உன்னை படைத்த
பிரமன். உன் அழுகுக்கு நாம் அடிமையே

"மலையகமே" ஏழைகளுக்கு தஞ்சம் வழங்கும் நீயே நாம் போற்றும்
தெய்வம். உன்னால் நம் நாடே வளம் பெறுகின்றது.

"மலையகமே" எந்தத்திக்கிலும் இல்லாத சுதந்திரம் ஒற்றுமை
மனஅமைதி அனைத்தும் தருவது நீயே

"மலையகமே" உன்னிடத்தில் நாம் இருப்பது நாம் செய்த
புண்ணியமே. எத்தனை பிறவி எடுத்தாலும்
உன்னிடத்தே பிறக்க வேண்டும்.


த. கோபிநாத்

ஆண்டு –10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From*



**LANKA TRANSPORT SERVICE**

154/1A, LOWER STREET
BADULLA

TEL: 055-2115



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறித்துக் கொள்ளுங்கள்

1. நீராவி படகை கண்டு பிடித்தவர் யார்?
ஃ போல்டன்

2. மனிதனுடைய சிறுகுடலை வெட்டி விரித்தால் எதன் பரப்புக்கு சமனாகும்
உதைப்பந்தாட்ட மைதானத்தின் பரப்புக்கு

3. உலகில் முதன் முதலாக எந்நாட்டில் குடியரசு ஆட்சி நிறுவப்பட்டது?
ஸ்பார்ட்டா என்ற நாட்டில்

4. தையல் இயந்திரத்தை கண்டு பிடித்தவர் யார்?
இலயில் ஹாங்

5. உலகில் மிக உயரமான சைக்கிளை தயாரித்தவர் யார்? எந்த நாட்டில்?
மால்கம் கிளார்க் என்றலர் நார்த் ஹாம்டன் என்ற நாட்டில்

6. துவிச்சக்கர வண்டியை கண்டுபிடித்தவர் யார்
வின் தேசன்

7. தொலைக்காட்சியை கண்டுபிடித்தவர் யார்?
ஜோன் லொசி பெயார்ட்

8. கைத்துப்பாக்கியை கண்டுபிடித்தவர் யார்?
கோல்ட்

9. உலகிலேயே மிக் குறைவான எழுத்துக்களை கொண்ட மொழி எது?
ஹலாயன்

10. மணிக்கூட்டை கண்டுபிடித்தவர் யார்?
கிரீமியன் அய்வரஸ்

**ஆக்கம்- ஜெ.கார்த்திக்**

ஆண்டு 7B



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From*

**S.S SELVARATNAM**

GENERAL MERCHANTS

89, MAIN STREET
HATTON
TEL: 0512-619

*With Best Compliments From*

NEW LALITHA JEWELLERS

189, MAIN STREET
RATNAPURA
TEL: 045-2602

BRANCH
127, MAIN STREET
KAHAWATTA
TEL: 045-4276

28, WAJA POTHA RD.
NIVITHIGALA.
TEL: 045-9327.

*With Best Compliments From*

**S. RAMASAMY & SON**

1, GLENLYON BAZHAR
AGARAPATANA



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகில் மிகப் பெரியவை

| | | | |
|---|---|---|---|
| 1. | தேவாலயம் | - | சென்பீற்றர்ஸ் தேவாலயம் (ரோமாபுரி) |
| 2. | நூலகம் | - | லெனின் தேசிய நூலகம் (மொஸ்கோ) |
| 3. | நூதனசாலை | - | பிரித்தானிய நூதனசாலை (லண்டன்) |
| 4. | வெப்பப்பாலைவனம் | - | சஹாரா |
| 5. | தனிநாடு | - | பிறேசில் |
| 6. | இராச்சியம் | - | ரஸ்யகுடியரசு |
| 7. | தீவு | - | கிறின்லாந்து |
| 8. | மலை | - | இமயமலை |
| 9. | சமுத்திரம் | - | பசுபிக்சமுத்திரம் |
| 10. | கண்டம் | - | ஆசியா |
| 11. | சிலை | - | சுதந்திரசிலை (நியூயோர்க்) |
| 12. | அணைக்கட்டு | - | கூவர் அணைக்கட்டு |
| 13. | விமான நிலையம் | - | கென்னடி விமான நிலையம் (நியூயோர்க்) |
| 14. | குகை | - | டானா குகை (யப்பான்) |
| 15. | அரண்மனை | - | வத்திக்கான் அரண்மனை (ரோமாபுரி) |

தொகுப்பு எம். சதாத்
ஆண்டு 9B



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Warm Wishes From*

# INDRA STORES

127, MAIN STREET
BOGAWANTALAWA

GENERAL MERCHANTS & ESTATE SUPPLIERS

# INDRA TRANSPORT SERVICE

TRANSPORT AGENTS FOR BOGAWANTALAWA
PLANTATION LIMITED

7, MOSQUE ROAD
BOGAWANTALAWA

# PIONEER TRANSPOTERS IN

BOGAWANTALAWA



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூழல் பாதிப்பும் பாதுகாப்பும்

மனித இனம் இம்மண்ணில் தோன்றி பலகோடி வருடங்களாகி விட்டன. மனிதன் அப்பொழுது இருந்ததுபோல் இப்போது இல்லை. அது காலத்தின் செயல். அதேபோல் மனிதன் வாழ்ந்துவந்த இச் சூழல் கூட மாறிவிட்டது. ஆனால் காலத்தின் கட்டுப்பாட்டால் அல்ல. அது மனிதனது செயற்பாடுகளின் காரணமாகவேயாகும்.

மனிதனது தோன்றலின்போது இந்தச் சூழல் மாசுபடாமல் இருந்தது. மனிதனும் விலங்குகளும் ஒன்றாய் காட்டுச் சூழலில் வாழவேண்டி இருந்தது. மனிதனுக்கும் விலங்குகளுக்கும் தேவையான உணவு இயற்கையாகவே கிடைத்தது. சுவாசத்திற்கும் காற்றில் இருக்கவேண்டிய ஒட்சிசனின் அளவும் காபநீரொட்சைட்டின் அளவும் மாறுபடாமல் இருந்தது. மனிதன் தன் அறிவால் ஆராய்ந்து செயற்கையாக எதையும் தோற்றுவிக்கவுமில்லை.

காலப்போக்கில் மனிதனுக்கு தனது பகுத்தறிவு காரணமாக புதிய சிந்தனைகள் உதித்தன. மனிதனுக்கு அந்த ஆறாம் அறிவு கலங்கரை விளக்கம். ஆனால் சூழலுக்கு அது யமதூதன். பகுத்தறிவால் அவன் சூழலை மாற்றியமைக்கத் தொடங்கினான். சமூகங்களாக கூடி வாழ, காட்டுமிராண்டியான மனிதன் சிந்தித்தான். இதனால் நாகரீகங்கள் உருவாயின. ஓய்வு நேரத்தில் வாழ்க்கையைப்பற்றி சிந்தித்த அவன் சமயங்களை உருவாக்கினான். அதன்பின்னர் விஞ்ஞானமும் தோன்றி வளர்ந்தது.

நாகரீகமடைந்த மனிதன் விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களைச் செய்தான். அதனால் அவன் முன்னேறினான் ஆனால் சூழல் மாசுபடத் தொடங்கியது. சனத்தொகையும் நாட்டுக்கு நாடு அதிகரித்துக் கொண்டு சென்றது. இதனால் மனிதனின் தேவைகள் அதிகரித்தன. தேவைகளுக்கேற்ப உற்பத்தியை பெருக்கவேண்டியேற்பட்டது. அதனைச் செய்வதற்கு உணவுக்கு நிலமும், ஏனைய பொருட்களுக்காக தொழிற்சாலைகளும் நிறுவ நிலம் தேவைப்பட்டது. இதனால் பசுமையான இயற்கைக் காடுகள் அழிக்கப்படத்தொடங்கின.

மனிதனுக்கு அறிவுப்பசி அதிகரித்துக்கொண்டே போனது. இதனால் அவன் பூமியில் மட்டும் விஞ்ஞானத்தை பிரயோகிக்காமல் விண்ணிற்கும் பறந்தான். இதற்கு பாரிய அளவிலான எரிபொருள் பயன்படுத்தப்பட்டது. நச்சுவாயுக்கள், அணுகுண்டுகள், என்பன கண்டுபிடிக்கப்பட்டன.

காடுகள் அழிக்கப்பட்டதால் வளியிலுள்ள ஒட்சிசனின் அளவு குறைந்து காபனீரொட்சைட்டின் அளவு அதிகரித்தது. மனிதனும் விலங்குகளும் ஒட்சியனை சுவாசித்தலுக்கு பயன்படுத்தும், அதேவேளை தாவரங்கள் காபனீரொட்சைட்டை ஒளித்தொகுப்புக்கு பயன்படுத்துகின்றன. இதனால் வளியிலுள்ள வாயுக்களின் சமநிலை கெடாமலிருந்தது. தாவரங்களை அழிக்கவே காபனீரொட்சைட் அதிகரித்தது.

மேலும் பிலாத்திக்கு பொருட்கள் உற்பத்திசெய்யப்பட்டன. அவை ஒரே தடவையில் பாவித்து வீசியெறியப்பட்டன. இவை இராசயனத்தாக்கத்துக்குள்ளாகி ஓசோன் என்னும் பூமியின் மேல் புகையில் இருக்கும் காபன் வளியில் அதிகரித்தது. இதனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளிமாசடைந்தது. இதனால் பலருக்கு சுவாச நோய்கள் உருவாகின. தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்பட்ட கழிவுகள் ஆறு, குளம், கடல் என்பவற்றில் சேர்க்கப்பட்டன. இதனால் நீர் மாசுறுகிறது. விஞ்ஞானத்தால் கண்டுபிடிக்கப்பட்ட மருந்துகள், போதை மருந்து தயாரிப்பதற்கு வித்திட்டது. அவற்றால் கலாச்சாரம் மாசுபட்டது.

ஒரு கண்ணாடி அறையை சூரிய ஒளி புகவிட்டு வைத்தால் அதன் உள்ளே வெப்பம் அதிகரிக்கும் ஆனால் வெளியேறாது. இதேபோல வளிமண்டலக்காபன் அதிகரித்து அது பூமிக்கு ஒரு கண்ணாடி உறையைப்போல் மாறியது. இதனால் பூமியின் வெப்பநிலை அதிகரித்துக்கொண்டே வருகிறது. இதனால் துருவங்களில் பலகோடி லீற்றர் நீரை சிறைப்படுத்தி வைத்திருக்கும். இராட்சச பனிக்கட்டிகள் உருகத்தொடங்கியுள்ளன. அவை முழுதும் உருகினால் கடல் நீர்மட்டம் உயரும். இதனால் உலகின் பல நாடுகளும் தீவுகளும் நீரில் மூழ்கிப்போகக்கூடிய அபாயம் தோன்றியுள்ளது.

இவைமட்டுமல்லாமல் இப்போது ஒலியால் வழிமாசுறத்தொடங்கியுள்ளது. தொழிற்சாலைகள், வாகனங்கள், நவீன இசை, இவற்றால் வளிமாசுறுவதாகவும் இதனால் பலபேரின் கேள்விப்புலன் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

இவ்வாறு அபாயமான நிலைக்கு தள்ளப்பட்டிருக்கும் சூழலை, வெப்பநிலை அதிகரிப்பு, சுவாசநோய்கள், கலாச்சார மாசு என்பவற்றை தவிர்ப்பதன்மூலம் ஓரளவு புனரமைக்கலாம். இதற்கு மீள காடுகளை உருவாக்குதல், புகை அதிகமாக வெளிவிடும் வாகனங்களின் பாவனையை தடைசெய்தல், முதலியவற்றை மேற்கொள்ளலாம். ஆனால் ஓசோன் படையின் சிதைவு, ஒலியால் வளி மாசுறுதல், போன்ற சூழல் பாதிப்புக்கு காரணமானவன் மனிதனே. ஆகவே நாம் சூழலின்மேலும், வருங்கால சமுதாயத்தினர்மேலும் கருணை கொண்டு சூழல் பாதிப்பை தடுப்போமாக.

**முற்றும்.**

T.குகனேசன்

ஆண்டு 11B



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீடுகதைகள்

1. வயிறு புடைக்கத் தின்றால்தான் நிமிர்ந்து நிற்பான் குண்டன்
அவன் யார்?

2. நெருப்பிலே பிறந்து நீரிலே மூழ்கி வாயிலே வந்து வானத்திலே போவார்
அவர் யார்?

3. ஈரப்புடவைகாரி இருபத்தெட்டு சுற்றுக்காரி
அவள் யார்?

4. மரம் வழுக்கும் காய் துவர்க்கும் பழம் இனிக்கும்
அது என்ன?

5. என் காளை குட்டிக்காளை என்ன வைத்தாலும் சுமக்கும் காளை
அது என்ன?

6. பானை நிறையச் சோறு
அது என்ன?

7. நான் பார்த்தால் அவன் பார்ப்பான் நான் அழுதால் அவன் அழுவான் நான் மறைந்தால் அவன் மறைவான். அவன் யார்?

8. உழைப்பிலே பெரியவன் உருவத்திலே சிறியவன்
அவன் யார்?

9. கறுப்பு கோட்டுக்காரன் காவலுக்கு கெட்டிக்காரன்
அவன் யார்?

10. ஓடோடும் சங்கிலி உருண்டோடும் சங்கிலி பள்ளத்தைக் கண்டால் பாய்ந்தோடும் சங்கிலி அது என்ன?

விடைகள்

1. சாக்கு 2. தண்ணீர் 3. வெங்காயம் 4. வாழைப்பழம் 5. அடுப்பு
6. மாதுளப்பழம் 7. கண்ணாடி 8. எறும்பு 9. பூட்டு 10. தண்ணீர்

ஆக்கம் **John**
Yeae 4B



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From*

# GENERAL HARDWARE STORES

No 37, BAZAR STREET
BADULLA

TEL: 055-2375, 055-3785

*Space Donated by:*

☆

☆

☆

# TRANSTEEL MERCHANTS

GENERAL HARDWARE MERCHANTS & IMPORTERS

325, OLD MOOR STREET, COLOMBO-12.
TEL: 440951, 448781, 334442
FAX: 434282



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைவிழா போட்டி முடிவுகள் 1995

### பேச்சுப்போட்டி

**கீழ்ப்பிரிவு**

Cதிவ்யஜனார்த்தனன்-1ம் இடம்
J ஜெயநிஷாந்தன் -2ம் இடம்
M.A.M.M சப்ராஸ் -3ம் இடம்

**மத்தியபிரிவு**

S உமைபாலன் -1ம் இடம்
k நந்தகுமார் -2ம் இடம்
T. நவமுரளி -3ம் இடம்

**மேற்பிரிவு**

T . சுரேந்திரன் -1ம் இடம்
C. செல்வகாந்த் -2ம் இடம்
G . சுதர்சன் -3ம் இடம்

### விவாதப் போட்டி

**மேற்பிரிவு**

T . சுரேந்திரன்
C. செல்வகாந்தன் -1ம் இடம்
S.M.M. பிர்தோஸ்

T. கோபிநாத்
P. கனேஸ்குமார் -2ம் இடம்
G. சுதர்சன்

### கட்டுரைப்போட்டி

**கீழ்ப்பிரிவு**

S. டினேஸ் -1ம் இடம்
C.திவ்யஜனார்த்தனன்-2ம் இடம்
M. உவெந்திரநாத் -3ம் இடம்

**மத்திய பிரிவு**

S.விஜயகாந்தன் -1ம் இடம்
மொஹமட் இஸ்ஷாட்-2ம் இடம்
S. செல்பதீபன் -3ம் இடம்

**மேற்பிரிவு**

T.குகனேசன் -1ம் இடம்
M.I.S.M.இப்பான் -2ம் இடம்
S.வசந்தன் -3ம் இடம்

### நாடகப்போட்டி

**மத்திய பிரிவு**

N.பிரசாத்
K.மதீஸ்வரன்
A.அசோக் 1ம்
S. ரஜீவ் இ
S. விஜயகாந்தன்
S. இந்திரநாத் ட
S. கலைசெல்வம் ம்
S. கோபிநாத்
P. வினோத்
K.சஞ்சஜன்

M.சிவபிரசாத்
K. நந்தகுமார்
G. சுரேஸ்
P. பிரசாத் 2ம்
V. கீதன் இ
S. நித்தியரூபன்
M. கிறிஸ்ணகுமார் ட
S. டிலான் ம்
S. வினோத்குமார்
S. குகதாசன்

**மேற்பிரிவு**

P.முத்துராஜ்
T. கோபிநாத்
G. சுதர்சன் 1ம்
S. கனேஸ்குமார்
M. சப்றாஸ் இ
S. கமலேஸ்வரன் ட
S. வதீசன்
P. கனேஸ்குமார் ம்
M. நவராஜன்
K.குமுதன்

C.செல்வகாந்தன்
C. சாண்டீபன்
N. சாந்தீபன் 2ம்
M. I. S. M. இப்பான்
M.I. M. அரபாத் இ
N. சரவணன் ட
M. S. இர்ஷாட்
D. M. கசாலி ம்
K. பிரதீபன்
P.M. திருக்குமாரா
T. குகனேசன்

### விளம்பரப் போட்டி

**மத்திய பிரிவு**

G. சுரேஸ் 1ம்
T. நவமுரளி
S. நித்தியரூபன் இ
M. கிறிஷ்ணகுமார் ட
P. சுரேன்
A. நௌபில் ம்

J. சாம்சன் 2ம்
R. வித்தியரூபன்
S. உதயதாஸ் இ
S. சந்திரமோகன் ட
N. டனியஸ்
A. கிளிபேட் ம்

**மேல்பிரிவு** 1ம்
S. சசிகுமார்
M.I.S.M. இர்பான் இ
D.M.கசாலி ட
ம்.

M.I.M. றைசுடீன் 1ம்
K. பிரதீபன் இ
S. சபேசன் டம்

S. ரமேஸ் 2ம்
R. பிரதீபன்
G. மனோஜ் இ
S. பிரதீசன்
J.பற்றிக் ட
R. கமலதாஸ் ம்

**வில்லிசை**

மத்திய பிரிவு
T.அரிதரன்
P. பிரசாத்
M. சிவபிரசாதத் 1ம்
M. நவமுரளி இ
J.ஜெய நிரோசன்
V. விஜயபிரகாஸ் ட
U. அனுதரன் ம்
K. தனேஸ்வரன்
S. வினோத்குமார்
P.சுரேன்

T. அரிகரன் 2
D பிரதீபன் ம்
R. பிரதீன் ரிரோன் இ
P. செந்தில்குமரன் டம்

A. நிர்மலன்
T. தரனீதரன்
N. ரஜீரதன்
S. செந்தூரச்செல்வன்

**மேற்பிரிவு**

T. சுரேந்திரன்
C. செல்வகாந்தன்
M. திருக்குமரா
P. ரவி 1ம்
S. சசிகுமார் இ
M.I.S.M. அரபாத்
T. குகனேசன் ட
K. மகிந்தகுமார் ம்
N. சாந்தீபன்
K. பிரதீபன்

G.சிறீதரன்
V. நாகதர்சன்
R.சஜேஸ்கண்ணா
S. ரவீந்திரநாதன் 2ம்
M.அனீஸ்
P.சதீஜஸ்குமார் இ
K.பிரேம்ராஜ்
K.நரேஸ்குமார் ட
P.முத்துராஜ் ம்
L.மேனகன்

### சிறுகதைப்போட்டி

**மேற்பிரிவு**

T. சிவமுரளி -1ம்இடம்
N. சாந்தீபன் -2ம் இடம்
T. கோபிநாத் -3ம்இடம்

### பாஓதல்

**கீழ்பிரிவு**

P. டினேஸ்குமார் -1ம்இடம்
N.ஜசிந்திரநாத் -2ம்இடம்
R. சுரேஸ்ராஜ் -3ம்இடம்

Tamil Medium Best (O/L) Results 1994
P.Devanandan.
Best all rounder- S .Sasikumar

**பாடசாலைகளுக்கிடையிலான நாடகப்போட்டி**

1ம் இடம் ரலோஸ் தமிழ் வித்தியாலயம்
2ம் இடம் பண்டாரவளை சென்தோமஸ் கல்லூரி
3ம் இடம் அல்தமுல்லை தமிழ் வித்தியாலயம்

### சிறந்த நாடக தொகுப்பாசிரியர்

திருமதி A. ஆநந்தராணி
ரலோஸ் தமிழ் வித்தியாலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்றும் ஒற்றுமை நீங்கினால் தாழ்வு உண்டு. என்றும் அறியாமலா சொல்லி வைத்தார்கள்' காட்டில் வாழும் மிருகங்களைப் பாருங்கள் கூட்ட கூட்டமாக சேர்ந்து செல்கின்றன வானில் பறக்கும் பறவைகளை பாருங்கள். கூட்டங் கூட்டமாக சேர்ந்து பறக்கின்றன. இதனால் இந்த மிருகங்கள் நமக்கு வரும் ஆபத்துக்களில் இருந்து காப்பாற்றப்படுகின்றன. அந்த நல்ல பழக்கம் மனிதர்களுக்கும் வேண்டும். ஒற்றுமையாக வாழப் பழகிக் கொண்டால் நமது வாழ்வில் என்றுமே துன்பமில்லை. அமைதியம் அன்பம் பெருக வாழலாம். நமக்கு ஏற்படும் துன்பங்களை நம்மைச் சேர்ந்தவர்கள் பகிர்ந்து கொள்வார்கள்.

ஆபத்தில் சிக்கிவிட்டால் காப்பாற்றுவார்கள். தனி ஒருவனால் செய்யமுடியாத காரியங்கள் உலகில் பல உண்டு. பலரும் சேர்ந்து செய்யும் போது விரைவாகவும் எளிதாகவும் செய்ய முடிகிறது.

எல்லோரும் சேர்ந்து ஒற்றுமையாக செயல்பட்டால் இந்த உலகில் நிம்மதியாகவும் சந்தோசமாகவும் வாழலாம். சிறுவர்களாகிய நாம் ஒற்றுமையாக வாழப்பழகிக்கொண்டால் நம்மை யாருமே வெல்ல முடியாது. இனிமையாக வாழலாம்.

ஆக்கம் **L.Praveenth**
ஆண்டு 5
**புனித தோமையார் கல்லூரி**
**பண்டாரவளை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From*

# S.R.K

53, MAIN STREET,
KANDAPOLA



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Space Donated by.*

✧
✧
✧
✧

# VIKNESH JEWELLERY

DEALERS IN GOLD JEWELLERY

66, SIDE STREET,
HATTON
TEL: 0512-617

*Space Donated by.*

❀
❀
❀
❀

# Polycar P.V.C Industries

18, Karunaratne Building
Damurugiri Road
Hatton

Tel: 0512-352



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்தல்

❋ எமது அழைப்பினை ஏற்று சிரமம் பாராது வருகை தந்து விழாவினை சிறப்பித்த பிரதம அதிதி அவர்களுக்கும்

❋ எமது அழைப்பினையேற்று சிரமம் பாராது வருகை தந்து பரிசில்களை வழங்கி சிறப்பித்த திருமதி திலகவதி ஈஸ்வரன் அவர்களுக்கும்

❋ எமது பாடசாலை தலைமை ஆசிரியரும், மன்றகாப்பாளருமான திரு ஆர்.ஆர்.ஆர் கேஹரத்கே அவர்களுக்கும்.

❋ தமிழ்இலக்கிய கலாமன்றத்தின் பொறுப்பாசிரியர் திரு எம். தேன்நிலவு அவர்களுக்கும்

❋ தமிழ் இலக்கிய கலாமன்றத்தின் பிரதம ஏற்பாட்டாளரான திரு. ஜி. தங்கராஜா அவர்களுக்கும்

❋ சகல நிதி உதவிகளையும் செய்து உதவிய நிதிப்பொறுப்பாளர் திரு.எம். சந்திரகுமார் அவர்களுக்கும்

❋ மாணவர்களின் ஆக்கங்கள், திறமைகள் ஆகியவற்றை சிறப்புற விழாவில் அரங்கேற்ற உதவிய அனைத்து ஆசிரியர்களுக்கும்.

❋ எமது இதழுக்கு ஆக்கங்களை தந்து சிறப்பித்த ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும்

❋ இம்மலரை உங்களுக்கு சமர்ப்பிக்க எங்களுக்குதவிய எல்லா நலன் விரும்பிகளுக்கும்.

❋ எமது வேண்டுகோளுக்கிணங்க நாடக போட்டியில் பங்குபற்றிய ஏனைய பாடசாலை மாணவ, மாணவிகளுக்கும்.

❋ எமது விழாவிற்கு சமூகமளித்த பெற்றோருக்கும் ஏனையோருக்கும்.

❋ நாடகப்போட்டிக்கு பணப்பரிசுகளை வழங்கிய திரு.M. சிவனேசன் அவர்களுக்கும்

❋ இவ்விதழினை அழகுற அச்சிட்டு வடிவமைத்து தந்த அச்சகத்தாருக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகள்.

**தமிழ் இலக்கிய கலாமன்றம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*'We wish the Timil Literarye Association all the success it deserves'*

# SRI LAKSHMI BANKERS

LICENSED PAWN BROKERS

Your Money Needs Our Service

276B, Main Street,
Passara.
T.P. 055- 8221

# ஸ்ரீ லக்ஷ்மி பேங்கர்ஸ்

உத்ததரவு பெற்ற நகை அடகு பிடிப்பவர்கள்

உங்கள் பணத்தேவைக்கு உடன் நாடவும்

276B, பிரதான வீதி,
பசறை.
தொலைபேசி இலக்கம்: 055- 8221



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரிசுத்த வேதாகமத்திலிருந்து

### வேதாகமப் பொன் மொழிகள்



கர்த்தருடைய கண்கள் எவ்விடத்திலுமிருந்து நல்லோரையும் தீயோரையும் நோக்கிப் பார்க்கிறது.

உன்னைப்பெற்ற தகப்பனுக்கு செவிகொடு. உன் தாய் வயது சென்றவளாகும் போது அவளை அசட்டைப் பண்ணாதே.

உன்னிடத்தில் அன்புகூருகிறது போலப் பிறறிடத்திலும் அன்பு கூறுவாயாக.



உன் சத்துரு பசியாயிருந்தால் அவனுக்கு ஆகாரங்கொடு அவன் தாகமாயிருந்தால் குடிக்கத் தண்ணீர் கொடு.

மேன்மைக்கு முன்னானது தாழ்மை. அழிவுக்கு முன்னானது அகந்தை. விழுதலுக்கு முன்னானது மனமேட்டிமை.



பகை விரோதங்களை எழுப்பும் அன்போ சகல பாவங்களையும் மூடும்.

தீமையை விட்டு விலகி நன்மை செய் என்றென்றைக்கும் நிலைத்திருப்பாய்.



பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது ஆகையால் நீங்கள் பண ஆசை இல்லாதவர்களாய் நடந்து உங்களுக்கு இருக்கிறவைகள் போதும் என்று எண்ணுங்கள்.

கர்த்தரையே தன் நம்பிக்கையாக வைக்கிற மனிதன் பாக்கிவான்



நீங்கள் கோபங்கொண்டாலும், பாவம் செய்யாதிருங்கள். சூரியன் அஸ்தமிக்கும் முன்னாக உங்கள் எரிச்சல் தனியக் கடவது.

ஆசிரியை செல்வி D.F கிறிஸ்டோபர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org